Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'

இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(சி-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425, ஷவ்வால் 10 (05.12.2003) வெள்ளிக்கிழமை இதழ்:66

# பிரபாகரனுக்கான விசேட செய்தியை தூதர் மூலம் அனுப்பினார் சந்திரிகா!

## சாதகமான பதிலுக்கும் காத்திருக்கிறாராம்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து விசேட செய்தியொன்றைக் கையளிப்பதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தூதுவர் ஒருவரை வன்னிக்கு அனுப்பிவைத்திருப்பதாக இணையத் தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.**

முன்னாள் நீதிபதி ஏ.ரி.சி எலியாஸின் புதல்வரையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட செய்தியுடன் வன்னிக்கு அனுப்பிவைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இவர் ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் கையளிப்பதற்காக - நேற்றுக்காலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை அழைப்பு விடுத்தால் இந்திய அரசு தலையிடுமாம்!

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கமும், பொதுமக்களும் அழைத்தால் சமாதானப் பேச்சுக்களில் இந்தியா தலையிடும்.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஏ.கே.ராஜ்கோத்ரா தெரிவித்தார்.

நேற்று கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமர் இன்று மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான ஒருமைப்பாட்டு முயற்சிக்கான மற்றொரு சந்திப்பு, இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# தேசிய அரசையோ, பிரதியமைச்சையோ ஐ.தே.முன்னணி அரசாங்கம் ஏற்காது!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியையோ, இடைக்கால அரசையோ தாம் ஏற்கத் தயாராக இல்லையென நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கம் ஜனாதிபதியுடன் பேசி, விரைவில் கருத்தொருமைப்பாட்டினை உருவாக்கும். அந்த வகையில் இன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதியுடனான பிரதமரின் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடயம் சாத்தியமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின் மூலம் பல் துறை சார்ந்த விடயங்களிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் மோதல்களை உடனடியாகத் தீர்த்து சமாதானப் பேச்சை மீளவும் ஆரம்பியுங்கள்!

## ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மோதல்களை உடனடியாக தீர்த்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள நல்லதொரு வாய்ப்பினைத் தவறவிட்டுவிடவேண்டாம் எனவும் ஜப்பானிய அரசாங்கம் - இலங்கை அரசியல் தலைவர்களுக்கு வலியுறுத்தித் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜப்பானிய வெளிவிவகார

(10 ஆம் பக்கம் பார்க்க)



யொறிக்கோ கவாக்குச்சி

## புலிகளிடம் சரணடைந்த சிப்பாய் கண்காணிப்பாளரிடம் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று மாலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுக் காலை முகமாலையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிக்குச் சென்ற இரத்தினபுரியைச் சேர்ந்த கே.எல்.சரத்குமார (வயது 21) என்ற சிப்பாய் தன்னை சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

இதனையடுத்து அவரை அழைத்துச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் போர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உறுதிமொழியை வழங்கும் வரைக்கும் ஒட்டாவா உடன்பாட்டில் அரசு கைச்சாத்திடாது!

### பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கண்ணிவெடிகளை இனிமேல் காலங்களில் புதைக்கமாட்டோம் என்ற உறுதிமொழி வழங்கும்வரை - அரசாங்கம் சர்வதேச கண்ணிவெடித் தடை (ஒட்டாவா உடன்படிக்கை) ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமாட்டாது.

இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகரும் தேசிய கண்ணிவெடிகள் இயக்கத் தடைத் தலைவருமான பிரட்மன் வீரக்கோன்.

பிரதமர் அலுவலகத்தில் நடந்த கண்ணிவெடி ஒழிப்புக்கான நிகழ்வில் கலந்துகொண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மழை தொடர்ந்து பெய்யுமாம்!

(கொழும்பு)

மழை தொடர்ந்தும் பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுவதாக இலங்கை வளிமண்டலவியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடையிடையே மழை பெய்யும் அதேவேளை, இடிமின்னல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த மாதம் மட்டும் யாழ். குடாநாட்டில் 518.5 மில்லிமீட்டர் மழை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் குடியேறுவதற்கு அனுமதி மறுப்பு:

# ஜனாதிபதி மற்றும் பிரதமர் மீது மாவை எம்.பி. வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாததை எதிர்த்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரசிங்க உட்பட சிலருக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனிதஉரிமை மீறுல் வழக்கொன்றைத் தாக்கல செய்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமது வீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த வழக்கினை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் மற்றும் அந்த பிரதேசத்தை சேர்ந்த பொதுமக்கள் இருவரும் இணைந்து தாக்கல் செய்துள்ளனர். அவர்கள் உயர் நீதிமன்றிக்குச் சமர்ப்பித்துள்ள மனுவில், பாதுகாப்பு அமைச்சைக் கையில் வைத்திருக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர், இராணுவத் தளபதி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருக்கு எதிராக இந்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

(சி -1845)

# தமிழீழ நீதி மன்றங்களில் தேசவுடமைச் சட்டம் அமுல்!

(கிளிநொச்சி)

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் சட்டவாக்கப் பிரிவின் தேச உடமை காப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ள தேச உடமைச் பாதுகாப்புச் சட்டத்தில்- தமிழீழ வரம்புக்குள் இருக்கும் தொல்பொருள்கள், கனிய வளங்கள், மாவீரர் நினைவு உடமைகள், இடுகாடு, சுடுகாடு உடைமைகள், பயன் பெறும் தாவரங்கள், அற்றுப் போகும் விலங்குகள், கைவிடப்பட்ட படைக் கலப்பொருட்கள், கோவில் உடைமைகள், குள உடமைகள், கலை உடமைகள், பள்ளி உடமைகள், மருத்துவ உடமைகள், உள்ளூராட்சி உடமைகள் மற்றும் பொது அமைப்பு உடமைகள் என்பவற்றை உள்ளடக்கியே தேச உடமைக் காப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

# இந்துசமய விவகார அமைச்சின் 55 ஆவது தொடர் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ் மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 55 ஆவது தொடர் சொற்பொழிவு இன்று மாலை 5.30 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய மாணவி செல்வி கார்த்திகா செல்வராஜா, யாழ் இந்துக் கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வர் கு.குருபரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

# மனித உரிமைகள் தினத்தின் வினாவிடை இறுதிப் போட்டி!

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களை, இன்று காலை 9 மணிக்கு யாழ்.மனித உரிமைகள் அலுவலகத்திற்கு வருகை தருமாறு செயற்பாட்டு அலுவலர் வி.வேழினி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்ட இந்த வினாவிடைப் போட்டியில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு தெரிவானோர் விபரம் வருமாறு -

கு.குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), இ.உமா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ஜெ.கல்யாணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பு.வாசுகி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ச.லாவண்யா (வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலை), ரி.எனோதாரணி (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), க.பிரகாஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பு.அபிமாறன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்), சி.பரதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

வி.பிரியா (யூனியன் கல்லூரி), ஜெ.அமிர்தாப் (கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), அருள் பிரதீபன் (ஊர்காவற்துறை சென். அன்ரனீஸ்) ஆகிய 12 பேருமே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருப்பதால் இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு அழைககப்பட்டுள்ளார்கள்.

# கரவெட்டி பிரதேச செயலகத்தில் சமூக அபிவிருத்தி மன்று அங்குரார்ப்பணம்

(கரவெட்டி)

சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவின் கீழ் - கரவெட்டி பிரதேச செய லர் பிரிவில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்று, இன்று காலை 10.00 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

25 பேர் கொண்ட செயற்குழு இந்த மன்றாக செயற்படும். பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் தலைவர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர், மத குருமார், சமுர்த்தி வலயங்களிலிருந்து தலா ஒவ்வொரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர், ஒரு கிராம அலுவலர், பிரதேச செயலகத்தால் நியமனம் பெறும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மூவர் உட்பட, இந்த உறுப்பினர் தெரிவு அமையவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மன்று சமுர்த்தி கொடிதினம் போன்றவற்றால் திரட்டப்படும் நிதியினை வறியமக்களின் பொதுநலத் திட்டத்திற்கு சிபார்சு செய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

# நல்லூர் பிரதேசசபை அறிவித்தல்

**1. படவரைஞராகப் பதிவுசெய்தல் - 2004**

2004 ஆம் படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்யப்பட்டு உள்ளவர்களும் 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**2. வியாபார உரிமம் அனுமதிப் பத்திரம் - 2004**

இந்தப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2004 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தை 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் பெற்று பூர்த்தி செய்து கொக்குவில்/நல்லூர் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**3 நல்லூர் பிரதேசசபை ஆதனவரி அறிவித்தல் 2003/நல்லூர்/கொக்குவில் உப - அலுவலகங்கள்**

2003 ஆம் ஆண்டு 4 ஆம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 31.12.2003 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் 15%

ஏனைய காணிகள் கட்டிடங்கள் 20%

நிலுவை உட்பட 2003 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987 ஆம் ஆண்டில் பிரதேசசபைகள் கட்டளைச் சட்டம் இல. 134 (5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டிடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் - சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத்தருகின்றேன். எனவே, கட்டிடங்கள், மதில், மலகூடங்கள் கட்டுதல் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு நல்லூர் பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேசசபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும் என அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

**5 வெற்றுப் போத்தல் விற்பனை -**

கீழ்க்குறிப்பிட்ட வகையான வெற்றுப் போத்தல்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. 750 மி.லீ. - முழுப்போத்தல்
2. 725 மி.லீ. - கோடியல் போத்தல்
3. 450 மி.லீ - சிறிய போத்தல்

**6. நல்லூர் பிரதேசசபை நல்லூர்/கொக்குவில் உப - அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல் - 2004**

1987 ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீட்டு நடப்பு வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு அறவீடு செய்யப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2004 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்த கந்தாயத்தில் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2004 ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**7. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் அவர்களால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசிய சூழல் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர் பிரதேசசபையின் நிர்வாக பிரதேசத்தில் 22.11.2000 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் 'ஆ' பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக இப்பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடனோ/உப - பணிமனைகளுடனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 01.01.2004 இற்கு முதல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரம் சகல உப - பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

04.12.2003 (சி-1862)

# பண்பாட்டியல் முதுகலைமானி பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டியல் முதுகலை மாணவர்களுக்கான பயிலரங்கு - பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறுமென இணைப்பாளர் கலாநிதி சண்முகலிங்கன் அறிவித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

கண்டி வீதி, தபாற்கட்டைச் சந்திக்கு அண்மையில் 'ஏ.வி.' வீதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு தொடர்பு : எஸ்.ஏ.தர்மலிங்கம் 24, புறூாடிலேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (544)


ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
சிலம்பரசன், ஷர்மி நடித்த
காதல் அழிவதில்லை
காட்சிநேரம் :10.30, 2.30, 6.30 (பு.நே)
2 FAST 2 FURIOUS
இரவு 9.30 மட்டும் (சி-1847)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
CATCH ME IF YOU CAN
(சி-1846)

X'MAS & NEW YEAR SALE
நத்தார், புதுவருட மலிவு விற்பனை
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31 ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
லைடன் புடவை நிலையம்
(பஸ் நிலையம் எதிர்)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222381
சகல பொருட்களுக்கும் விசேடகழிவுண்டு
(சி/1841)

7வது வெற்றி ஆண்டில்
IECE
121/1 அரசடி வீதி, கந்தர்மடம்.
கல்வியாண்டு – 2004
ஆங்கிலம்
ஆரம்பம் 05.12.2003
Gr. 6 தொடக்கம் O/L வரை
(Personal & Group Classes)
BY: K.RAMANATHASAN
- மாதாந்தப் பரீட்சைகள்
- தவணைப் பரீட்சைகள்
- கையேடுகள்
- கணினிமயப்படுத்தப்பட்ட வகுப்புகள்.
ஒவ்வொரு வகுப்புக்களும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
(541)

## கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு கதிர்காமர் போட்டியிடவுள்ளமை நிறபேத போராட்டமாக மாற்றம்!



பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் பதவிக்கு, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடவுள்ளதாக அறிவித்திருப்பதையடுத்து, இது நிறபேதப் போராட்டம்போல மாறியிருப்பதாக சர்வதேச அரங்கில் பேசப்படுகிறது.


இவ்வமைப்பின் தற்போதைய தலைவராக இருக்கும் நியூசிலாந்தைச் சேர்ந்த டொன் மக்கினொன் என்பவரே அடுத்த முறையும் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என பெரும்பாலும் உறுதிசெய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது லக்ஷ்மன் கதிர்காமர் இந்தப் பதவிக்குப் போட்டியிடப் போவதாக கடைசி நேரத்தில் அறிவித்தார்.

ஜனாதிபதி றொபர்ட் முகாபே தலைமையிலான சிம்பாப்வேக்கும், பிரித்தானியா மற்றும் மேற்குலக நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினையில் மேற்குலகை எதிர்க்கும் தென்னாபிரிக்காவின் ஆதரவுடனே லக்ஷ்மன் கதிர்காமர் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் டொன் மக்கினொன்னையே ஆதரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த விவகாரத்தில் சிம்பாப்வே தொடர்பான சர்ச்சையும், தென்னாபிரிக்காவின் ஆதரவு லக்ஷ்மன் கதிர்காமருக்கு இருப்பதாகச் சொல்லப்படுவதும், இந்தப் பதவிப் போட்டியில் நிறபேதம் முதன்மைப்படுத்தப்படுவதான சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## கிண்ணியா தாக்குதல் தொடர்பான ஹக்கீமின் கருத்துக்குக் கண்டனம்!

### தொலைக்காட்சிப் பேட்டியில் பொதுமக்கள் கருத்து



திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைகளுடன், மூன்றாந்தரப்பு ஒன்றுக்குச் சம்பந்தம் இருப்பதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை விமர்சித்து, அரசாங்கமே இந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும் என்ற அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கருத்துக்களை பலரும் கண்டித்துள்ளனர்.

இதுதொடர்பாக மக்கள் சிலரிடம் கொழும்பு தனியார் தொலைக்காட்சி சேவையொன்று கருத்துக் கேட்டபோது, அவர்கள் ரவூப் ஹக்கீமின் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று தெரிவித்தனர்.

ரவூப் ஹக்கீமும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்தானே? அப்படியிருக்க அவர் எப்படி அரசாங்கம்தான் இதற்குப் பொறுப்பெடுக்க வேண்டுமெனக் கூறி நழுவமுடியும் என்று, அந்தத் தொலைக்காட்சி செவ்விகளில் தெரிவித்துள்ள பொது மக்கள், உண்மைநிலை என்ன என்பதை தீரவிசாரித்து நடவடிக்கை எடுப்பதைவிடுத்து, அரசாங்கத்தின் மீது பழிசொல்வது பொறுப்பற்ற ஒரு செயல் என்றும் விமர்சித்துள்ளனர்.

தற்போது இந்தியாவில் தங்கியுள்ள ரவூப் ஹக்கீம், இதே தொலைக்காட்சி சேவைக்கு கிண்ணியா நிலைமை தொடர்பாக வழங்கிய செவ்வியின்போதே, அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டிப் பேசியதுடன், இச்சம்பவங்களுடன் மூன்றாந்தரப்புக்கு தொடர்பிருப்பதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலை மாணவர் சீருடைத்துணி அடுத்த மாதம் விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகள, அடுத்தமாதம் 22 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வழங்கப்படவுள்ளன.

துணிவகைகள் முழுவதையும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால், சிறிது தாமதம் ஏற்படலாம் எனப் பாடசாலைக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும், சீருடைகளுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும், பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிராம சேவகரிடம் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை 19 ஆம் திகதிக்கு முன்னர்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை, எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் என்று இந்தக் கட்சிகளுக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஜே.வி.பி முக்கியஸ்தர்களுக்கும் இடையில், கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விரிவாகப் பேசப்பட்ட இந்தச் சந்திப்பிலேயே - எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர், இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது என்ற முடிவு செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து ஜே.வி.பி தலைவர்கள் மீண்டும் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இரத்தினக்கல் கடத்தியோர் கைது

(கொழும்பு)

இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களைக் கடத்தமுயன்ற இரண்டு பேரை, நேற்றுக்காலை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்து, சுங்க அதிகாரிகள் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து - பக்ஸ் இயந்திரங்கள், செலுலர் தொலைபேசிகள், சிகரெட்டுக்கள் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளும் கைப்பற்றப்பட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனா. இவர்கள சிங்கப்பூரிலிருந்து கொழுமபுக்கு வந்ததாகத் தெரியவருகின்றது.

## சமாதானப் பேச்சை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சு வேண்டும்!

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல, பாதுகாப்பு அமைச்சு பிரதமரின் கீழ் இருப்பது அவசியமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும், பேராசிரியருமான ஜீ.எல்.பீரிஸ்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுககான குழுநிலை ஒதுக்கீட்டு விவாதத்தில், நேற்றுமுன்தினம் பதில் உரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் - நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கிடையில் பொதுவான கொள்கை ஒன்று இருப்பது அவசியமாகும். இது தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம-ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தவுள்ளார். இதனையடுத்து, நாடாளுமன்ற ஆய்வுக்குழுவின் தலைமைப் பொறுப்புக்கள் - எதிர்க் கட்சிகளிடம் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே தேர்தல் தொடர்பான சீர்திருத்தக்குழுவின் தலைமைப் பொறுப்பு - நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கப்படடதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன்மூலம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவைச் சிறந்தமுறையில் முன்னெடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (01)

## இலங்கை மின்சாரசபை நட்டத்தில் இயங்குகிறது

### அனுருத்த ரத்வத்த கவலை

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை பெரும் கடன்சுமையுடன் இயங்கி வருகின்றது என, முன்னாள் பாதுகாப்பு, எரிசக்தி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட விவாதததில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தற்போது இலங்கை மின்சார சபை 11.3 மில்லியன் ரூபா கடன் சுமையில் இயங்கிவருகின்றது. இதற்கான சீர்செய்யும் நடவடிக்கைகளைத் தற்போதைய அரசாங்கம் சரிவரச் செய்யவில்லை. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்திலும், மின்சார சபைக்குப் பாதிப்புக்களே ஏற்பட வாய்ப்பிருக்கின்றது என்றார்.

அங்கு உரையாற்றிய மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரிய - தான் இலங்கை மின்சார சபையைப் பொறுப்பேற்ற பின்னர், அதன வளர்ச்சிக்காக ஆயிரம் கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளதாகவும், முன்னைய அரசாங்கம் விட்டிருந்த தவறுகளால் ஏற்பட்ட கடன் ஓரளவு குறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## வடக்கு மக்கள் சமஷ்டி குறித்து எதுவும் அறியவில்லையாம்!

### கருத்துக் கணிப்பு கூறுகிறது

(கொழும்பு)

வடக்கில் வாழும் 60 வீதமான மக்கள், சமஷ்டி என்ற சொல்லினை ஒருபோதும் கேள்விப்படவில்லையென, அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும், நாட்டில் உள்ள மக்களில 65 வீதமானோர் தற்போதைய பிரச்சினைகளுக்கு சமஷ்டி வழிமுறையே முதற்தரத் தீர்வெனவும் தெரிவித்துள்ளதாகவும் அந்தக் கருத்துக்கணிப்பு தெரிவித்துள்ளது. ஆனாலும், நாட்டிலுள்ள 17 வீதமானோர் சமஷ்டி முறைக்கு தாம் உடன்படவில்லையெனவும் அந்தக் கருத்துக்கணிப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## திருமலை அசம்பாவிதப் பகுதிகளுக்கு அமைச்சர் மகேஸ்வரன் செல்வார்!

திருகோணமலையில் அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் விஜயம் செய்யவுள்ளார்.

நேற்றுமுன்தினம் அமைச்சர் மகேஸ்வரன் மூதூர் நிலமைகள் குறித்து ஜனாதிபதி அக்கறையுடன் செயற்படவேண்டும் என வலியுறுத்தி விடுத்த வேண்டுகோளிலேயே - இவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

திருகோணமலையின் ஆலங்கேணி, இடிமண், கடலூர், பைசால் நகர் முதலான பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும் அவலநிலையை அனுபவித்து வருகின்றார்கள். இது குறித்து தற்போது பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பில் இருக்கின்ற ஜனாதிபதியாகிய தாங்கள், உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஊடகங்கள் சில அங்கு நிலைமை சீரடைந்திருப்பதாகத் தெரிவிப்பது உண்மைக்குப் புறம்பானது. அங்கு பெரும் பதற்றமே நிலவிவருகின்றது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களையும், உணவு இன்றிப் பெரும் பட்டினியையுமே அனுபவித்து வருகின்றன.

மனிதாபிமான உதவிகளை எதிர்நோக்கி நிற்கும் அந்த மக்களுக்கு உதவும் பொருட்டு, நானும் எனது அதிகாரிகளும் அப்பிரதேச மக்களுக்கு இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு பெறுமதியான உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லவுள்ளோம். எமக்கான பாதுகாப்பையும், சென்று வருவதற்கான ஒழுங்கையும் மேற்கொண்டு தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடகங்களில் விடுக்கப்பட்ட பணிப்புரையை செம்மையாக நடைமுறைப்படுத்தி அங்கு விரைவில் இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

## மீனவர் கைதைக் கண்டித்து தமிழகத்தில் வேலைநிறுத்தம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் - இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் ஜெகதாப்பட்டின மீனவர்கள்- வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த மாதிரியான சம்பவங்களால் தழிழக மீனவர்கள் பெரும் துயரத்துக்கு ஆளாகுவதாகத் தெரிவித்தே, இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை இவர்கள் நடத்தியுள்ளனர்.

கச்சதீவுக்கருகே மீன்பிடிப்பதற்கு அனுமதியை பெற்றுத்தரும்படியும் - தமிழக முதலமைச்சர், இந்தியப் பிரதமர் முதலானோருக்கு ஏற்கனவே கடிதமனுப்பியிருந்தனர்.

இதற்கான தீர்வையும் உடன் இந்திய அரசு வழங்கவேண்டும் எனவும் கோரியே, இந்தப் போராட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

## மூன்று அமைச்சுக்குமான பிரதி அமைச்சர் பதவி எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்படலாம்!

### ஜனாதிபதி சந்திரிகா உத்தேசம்

(கொழும்பு)

ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீட்டின்போது நாடாளுமன்றத்தில் பதில் அளிக்கபோவது யார் என்பது தொடர்பான சர்ச்சைகளுக்கு இன்றைய சந்திப்பில் இணக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி மூன்று அமைச்சுகளின் சார்பில் பிரதமர் நாடாளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டும் என ஜனாதிபதி பிரதமரை கேட்டுள்ளார். ஆனால் பிரதமர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

மேற்படி மூன்று அமைச்சுக்களுக்கான விவாதம் எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களுக்கான பிரதி அமைச்சர் பதவி எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாகவும், எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன் இந்த பதவி வழங்கப்படும் என்றும் தெரியவருகிறது.

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் ஆட்சேர்ப்பு திட்டமிட்ட புறக்கணிப்பு

## கண்டித்து மாணவர் அறிக்கை

யாழ்.மாவட்டத்தில் 140 இற்கு மேற்பட்ட உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் உள்ளபோதும், அவர்களுக்கான வேலைவாய்ப்பினை வழங்க வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு தவறிவிட்டதென உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது -

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளைக் கருத்தில் கொண்டு பத்திரிகை வாயிலாகவோ அல்லது வர்த்தமானி மூலமாகவோ விளம்பரப்படுத்தி ஆட்சேர்ப்புச் செய்யப் படும் எனக் கோரப்பட்டபோதும், எமது ஆட்சேர்ப்பு விடயம் திட்டமிடப்பட்டு விலக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தினராகிய நாங்கள், மிகவும் மனவருத்தத்துடன் தெரி விக்கின்றோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தி லிருந்து வெளியேறிய, டிப்ளோமாதாரிகளுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள 300 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள் ளதாக, மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளும், வல யக்கல்விப்பணிப்பாளர்களும் மற்றும் அதிபர்களும் கோடிட்டு காட்டியபோதும், எமது விடயம் திட்டமிடப்பட்டு விலக்கப்பட்டுள்ளது.

எனவே, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் - ஏனைய பாட ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு வர்த் தமானி வாயிலாக விண்ணப்பம் கோரப்பட்ட விடயம், எமது டிப்ளோமாதாரிகளை விசனத்துக்கு உள்ளாக்கி உள்ளது. இந்த விடயம் தொடர்பாகக் கோடிட்டு காட் டியவர்களும் எதுவித நடவடிக்கையும் மேற்கொண்ட தாகவும் தெரியவில்லை. கடந்த காலத்தில் ஆசிரியர் சங்கம் சில கோரிக்கைகளை முன்வைத்து, போராட்டம் நடத்தியபோதும், உடற்கல்வி வேலைவாய்ப்பு இக் கோரிக்கையில் ஒன்றாக இருந்தது. ஏனைய கோரிக்கை கள் நிறைவேற்றப்பட்டபோதும், உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் பற்றிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. பலம் பொருந்திய ஆசிரியர் சங்கம் இந்த விடயம் தொடர்பாக மேலதிக அக்கறை செலுத்தி, எமக்கு நியமனம் பெற்றுத்தராதா? நாம் நாடாளுமன்ற உறுப்பி னர்களைச் சந்தித்தபோது, 1000 பேருக்கான ஆசிரிய நியமனத்தில் எமக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தரு வதாக உறுதி அளித்திருந்தனர்.

ஆனால், எமது பாடம் வர்த்தமானியில் பிரசுரிக் கப்படவில்லை. இதனால் மாணவர்கள் கடும் உளப்பாதிப் புக்குள்ளாகியுள்ளனர். இதனைக் கருத்தில்கொண்டு, சாதகமான நடவடிக்கையை துரிதகதியில் மேற்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை உடற்கல்வி ஆசிரியர்கள் வெற்றி டம் உள்ளபோதும், வெற்றிடம் இல்லை எனக் கருதி எமது பாடம் புறக்கணிக்கப்பட்டமை - யாழ். சார்ந்த அதிகாரிகள் செயலா? அல்லது மாகாண அதிகாரிக ளின் செயலா? என உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வினா எழுப்புகிறது. எனவே, எம் மீது ஆர்வம் கொண்ட அனைத்துத் தரப்பினரும் குறிப்பாக நாடாளு மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அமைச்சு செயலா ளர்கள், அதிகாரிகள் - வேலையற்றுத் துன்பப்படும் டிப்ளோமாதாரிகளை ஒரு கணம் சிந்தித்து, ஆசிரிய நியமனம்பெற ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கின் றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிப்ளோமாதாரிகள் மறியற் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

உடற்கல்வி டிப்ளோமா பாட நெறியினை முடித்து வெளியேறிய வர்கள், தமக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கவில்லை எனப் பலமுறை பலருக்கு முறைப்பாடு செய்தும், தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில உடற்கல்வி ஆசிரியர்கள் பற்றாக் குறை காணப்படுகின்றது. அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தேவை யான உடற்கல்வி டிப்ளோமாதாரி கள் வெளியில் வேலை வாய்ப்புகள் இன்றி இருக்கின்றனர்:

இவ்வாறு வேலையற்றிருக்கும் 160 பேருக்கும் வேலைவாய்ப்ப ளிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனை வலியுறுத்தியே, கல் வித்திணைக்களத்துக்கு முன்னால் எதிர்வரும் 10 ஆம் திகதிமுதல் 15 ஆம் திகதிவரை அடையாள மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள் ளனர். இந்தப் போராட்டதின்மூலம், தமக்குத் தீர்வு கிடைக்கவில்லை யாயின், தொடர்ந்தும் மறியற் போராட் டத்திலும், உண்ணாவிரதத்திலும் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ள தாகவும் தெரிவித்துள்ளனர்.

### விளையாட்டுக் கழகங்களைப் பதிவுசெய்யக் கோரிக்கை

வலி.வடக்கு பிரதேச செயல கத்தினரால் நடாத்தப்படும் தடகள குழுநிலை விளையாட்டுப் போட் டிகளில் பங்குபற்றவிரும்பும் கழ கங்களில், இதுவரை பதிவுசெய்யப் படாத கழகங்களும், அங்கத்துவத் தைப் புதுப்பிக்கவிரும்பும் கழகங் களும் - தமது கழகப் பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் னர், வலி. வடக்கு பிரதேச செய லகத்தில் மேற்கொள்ளலாம். இதற் குப் பின், கழகப்பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென வலி. வடக்கு பிரதேச செயலர் தெரிவித் துள்ளார்.

### யாழ்.நகரில் சுவரொட்டிகள்

யாழ்.நகரை அண்டிய வீதிகள் எங்கும் தேசிய சமாதான பேரவை யின் ஏற்பாட்டில், 'அரசியல் தலை வர்களே சமாதானத்தனைக் குழப்பா தீர்கள்' என்ற சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன. இந்தச் சுவரொட்டிகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் பலவர்ணத் தில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

அதிகார போட்டிகள் காரண மாகச் சமாதானத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுப டாதீர்கள் என்ற வாசகங்கள் மிக வும் தெளிவாக எழுதப்பட்டிருப்ப தனை அந்தச் சுவரொட்டிகளில் காணமுடிகின்றது.

### சங்கிலி திருட்டு

கணவன் வெளியூர் சென்றதால், வீட்டில் தனித்திருந்த பெண்ணின் சங்கிலியினை ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர்குழு அபகரித்து சென்றுள்ளது. இந்தச் சம்பவம் திருநெல்வேலி வளாக ஒழுங்கை யில் இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி வளாகவீதியில் அமைந்துள்ள தீபா என்பவரது வீட் டில், நள்ளிரவு புகுந்த திருடர்குழு- கத்தியை காட்டி நகைகள், பணம் என்பவற்றை கேட்டு அச்சுறுத்தியுள் ளனர். தன்னிடம் நகை, பணம் எது வும் இல்லையெனக் கூறவே, கழுத் தில் இருந்த சங்கிலியை அறுத்து கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். (205)

## அச்சுவேலி கிராமிய வங்கியில்

# மகளிருக்கான சுயமுயற்சி கடன்திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங் கத்தின் கிராமிய வங்கி - மகளி ருக்கான சுயமுயற்சி கடன் வழங் கும் திட்டம் ஒன்றை அறிமுகப்ப டுத்தியுள்ளது.

இந்தக் கிராமிய வங்கியில் அங் கத்தவராகச் சேரும் ஒவ்வொரு மக ளிரும், மிகக் குறைந்தவட்டியில் சுயமுயற்சிக் கடனாகப் பத்தாயிரம் ரூபாவரை பெற்றுக்கொள்ளமுடியும்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளும் கடனை - தையல்இயந்திரம் கொள் வனவு செய்தல், கால்நடை வளர்த் தல் போன்ற தொழில் முயற்சிக ளுக்கே பயன்படுத்த வேண்டும் எனவும், கிராமிய மட்டத்திலான மகளிர் அபிவிருத்தியே இந்தக் கடன் வழங்கப்படுவதன் நோக்கம் எனவும் கிராமிய வங்கி முகாமை யாளர் ஆ.சந்திரநாதா தெரிவித் துள்ளார்.

இந்தக் கிராமிய வங்கியானது கடந்த அரையாண்டில் மட்டும் பதி னொரு இலட்சம் ரூபாவை தொழில் விருத்திக் கடனாக வழங்கியுள்ளது.

அத்துடன், அடுத்த ஆண்டுக் கான திட்டங்களாக - அடகுசேவை உட்பட பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள் ளதாகவும் தெரிவித்தார்.

(128)

# கச்சாய்பகுதி மீனவர்களை கடற்படையினர் தாக்கினர்

(வடமராட்சி)

அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கும் மேலாகக் கடலில் மீன்பிடித்தொழி லில் ஈடுபட்டமையால், கச்சாய்ப்பகு தியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் - கடற்படையினரால் தாக்கப்பட் டனர்.

இது குறித்து கச்சாய்ப் பகுதி மீனவர் சங்கத்தினர் தமது எதிர்ப் பைத் தெரிவித்துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த திங்கட்கிழமை காலை வள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் வலை கடலினுள் சிக்கிக் கொண்டது.

அதனை மீட்பதற்குச் சிரமப்பட்ட தில், மீனவர்கள் கரைதிரும்பத் தாம தமாகிவிட்டது. அந்தவேளை அங்கு வந்த கரையோரக் காவலில் ஈடுபட் டிருந்த கடற்படையினர் - ஏன் தாம தாமாக வந்தீர்கள் எனக் கேட்டுத் தாக்கியுள்ளார்கள்.

இதனையடுத்து, மீனவர்கள் பயணம் செய்த வள்ளமும் பறி முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (202)


## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்





### ஐந்தாவது அகவையில்

பெயர் : டி.டிரோஜன்
முகவரி : அளவெட்டி வடக்கு, அளவெட்டி.



### ஐந்தாவது அகவையில்



பெயர் : ப.அருள்ராஜ்
முகவரி : 11, கலைப்புலவர் வீதி.

### எட்டாவது அகவையில்

பெயர் : ச.இம்சானி
முகவரி : லூயிஸ் பிளேஸ், நீர்கொழும்பு.



### பத்தாவது அகவையில்



பெயர் : கா.மந்தாகினி
முகவரி : 406, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### பத்தாவது அகவையில்

பெயர் : மு.மிதுலன்
முகவரி : கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------


முகவரி :------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------

பெற்றோர் ஒப்பம்



# சீதனம்

## சோம்பேறிகளின் வேதனம்

"சீதனம் முதுகெலும்பில்லாதவர்களின் முகவரி'' இதை நான் சொல்லவில்லை அண்மையில் இலங்கையின் தனியார் வானொலி ஒன்றில் நடைபெற்றிருந்த சீதனம் சம்பந்தமாக நேயர்களின் தொலைபேசிவாயிலான கருத்துப்பரிமாற்றத்தின்போது, நேயர் ஒருவர் தெரிவித்த கருத்து. வித்தியாசமாக ஒருபெண் கூறியகருத்து என்னவென்றால், "சீதனம் வாங்குபவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டும்'' என்பதுதான். எது எப்படியிருந்தபோதிலும், அன்று எவரும் சீதனம் வாங்கப்படுவது ஒரு நியாயமான செயலாகக் குறிப்பிட்டிருக்கவிலலை.

சமூகத்தில் சீத்னத்துக்கு எதிராக இப்படி ஒரு எதிர்ப்பு நிலவிக்கொண்டிருக்கும் காலத்தில் - ஏன், எப்படி இந்த சீரழிவு தொடர்ந்துகொண்டிருக்கின்றது? இது பெண்களுக்கு எதிரான ஒரு கொடுமை எனப் பலராலும் சுட்டிக்காட்டப் படுகின்ற போதிலும், உண்மையில் இது தனியே பெண்களுக்கு எதிரான கொடுமை எனப் பச்சை குத்திவிடமுடியாது. இது ஒரு சமூகக்கொடுமை. இதனால் பாதிக்கப்படுபவர்களில் கூடுதலானவர்கள் பெண்கள் என்றபோதிலும், ஆண்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. ஒரு தகப்பன் தன் மகளை திருமணபந்தத்தில் இணைத்துவைக்க (நாட்டுப்புற வழக்கில் 'கரை சேர்த்தல்' எனக் குறிப்பிடப்படலாம்), ஒரு தம்பி தன் அக்காவை, ஒரு அண்ணன் தன் தங்கையினை கரைசேர்ப்பதற்கு எவ்வளவு கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கிறது.

இது இத்தோடு நின்றுவிட்டதா? இல்லையே. கரை சேர்த்துவைக்க, கணவன் ஏதோ அசம்பாவிதத்தால் இறந்துவிட அல்லது இயலாதநிலையில் இருக்க, அவளின் மகளையும் கரைசேர்க்கவேண்டிய தேவையும் சிலருக்கு ஏற்படுகின்றது. இப்படியே ஒரு தொடராக வளர்ந்துகொண்டிருக்கிறது.

எத்தனை ஆண்கள் இந்த சீதனப் பிரச்சினையால் தங்கள் உறவுகளைக் கரைசேர்க்க முடியாதநிலையில், பிரம்மச்சாரிகளாக இருக்கிறார்கள். காலங்கடந்து கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். கடன்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

என்னடா இது ஒரே ஆண்களுக்குரிய புராணமாக இருக்கிறதே என விசனப்படுகிறீர்கள், கொஞ்சம் பொறுங்கள். ஒரு விடயத்தை ஆராயவேண்டுமானால், தீர ஆராய வேண்டுமல்லவா. வெறுமனே சீதனம் பெண்களுக்கு எதிரான கொடுமை எனக் கோவிந்தா போட்டுவிட்டால், சரியாகிவிடுமா? சரி, இனிபெண்கள் பக்கம் வருவோம்.

இவர்களின் சோகம் கொடுமையானது. தனக்காக உறவுகள் கஷ்டப்படுவதனை கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். கரைசேர்ந்த பின், கட்டிய கணவனிடமிருந்து, "இன்னும் கொண்டுவா போ'' என்ற, கொஞ்சமும் ஈவிரக்கமற்ற கட்டளைகள். இதனால் மனமுடைந்து எத்தனை பெண்கள் தற்கொலை செய்கிறார்கள்.

இத்தனை கடினப்பட்டு என்னைக் கரை சேர்த்தவர்களிடம் போய், இன்னும் தாருங்கள் என்று எந்த முகத்துடன் கேட்பது என்பதுதான் இவர்களின் முடிவுக்கு காரணம். தற்கொலை என்பதை எந்த மனிதனாகப்பிறந்த ஜீவனும் எடுக்கக்கூடிய முடிவாக ஏற்றுக்கொள்ளமுடியாதவேளையிலும், வேறு என்ன செய்வது? இதைவிட எத்தனை பெண்கள் இந்தச் சீதனத்தினால் தமது உணர்வுகளைக்கருக்கிக் காலம் முழுக்க கன்னிகளாக காலங் கடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கல்யாணம் ஒன்றே கன்னியர்க்கு ஒரு நல்ல பாதுகாப்புக் கவசம் என்ற ஒரு நம்பிக்கை காலம் காலமாக நிலவிவருகிறது. அப்படியானால், மேற்சொன்னவர்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? சீதனத்தைத் திரட்டுபவர்களில் பெரும்பாலும் ஆண்களே சம்பந்தப்படுகின்றபோதிலும், சில சந்தர்ப்பங்களில் பெண்களும் இதில்பெரும் பங்கு வகிக்கின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது.

குடும்பத்தில் ஆண்கள் இல்லாத ஒரு நிலையில் தனது தங்கையின், அக்காவின் திருமணத்தினை நிறைவேற்ற எத்தனையோ பெண்கள் தம்மை அர்ப்பணித்தும் இருக்கிறார்கள்.

திருமணத்தின் பின்னரான சீதனக் கொடுமை இன்னும் சோகமானது இதனால், பாதிக்கப்படுவது முற்றிலுமாக பெண்கள் தான் என்றால் மிகையில்லை. சீதனம் கொண்டுவராமல் வந்தவள், கொண்டு வந்த சீதனம் பற்றாது, இன்னும் கொண்டுவர வேண்டி இம்சிக்கப்படுபவள் எனப் பெண்கள் படும் அவஸ்தை இருக்கிறதே - அப்பப்பா, அது கொடுமையிலும் கொடுமை. இதற்காக இவள் தற்கொலை செய்யப்படுவதையும் காண்கின்றோம்.

இது இலங்கையில் குறைவாக இருக்கின்ற போதிலும், இந்தியாவில் இது கட்டுப்படுத்த முடியாத ஒரு நோயாக இருக்கிறது. இத்தனைக்கும் சீதனத்துக்கு எதிரான சட்டம் இந்தியாவில் அமுலில் இருக்கிறது. ஆனால், இலங்கையில் இல்லை.

சீதனக்கொடுமையால் எத்தனையோ பெண்கள் - கையில் குழந்தைகளுடன், விதவைகளாக்கப்பட்டிருக்கும் இது போன்ற எண்ணுக் கணக்கற்ற வித்தியாசமான பாதிப்புக்கள் எமது கண்ணெதிரே சமூகத்தில் நாளாந்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இங்கு சுவாரஸ்யமான ஒரு விடயம் ஒன்று இருக்கின்றது. சீதனம் என்னும் கொடுமையான திரைப்படத்தில் வில்லன், வில்லிகள் எல்லோரும் இருக்கிறார்கள். பெண்களுக்கு நிகழ்த்தப்படும் கொடிய சித்திரவதைகளில் வில்லிகளாக பெண்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. மாமியார், மச்சாள் கொடுமை என இங்கு இருவேறு காட்சிகள்.

என்ன இந்த உலகமோ தெரியவில்லை. ஒரு மனிதப்பிறவி துன்பப்படுவதை இரசிக்க இன்னும் ஒரு மனிதப்பிறவி இருக்கிறதே. வெளிப்படையாக சீதனத்தின் கொடுமைகளையும், அதன் பாரதூரமான விளைவுகளையும் எம் கண்கூடாக பார்த்துக்கொண்டிருந்தும், ஏன் இந்த சீதனம் ஒழியவில்லை. நாம் என்ன சிந்திக்கமுடியாத சித்தப்பிரமை பிடித்த ஜடங்களா? இதனால், நாம் அடைந்த இலாபம் என்ன? நட்டம் என்ன? இதனால்தான் என்னவோ அன்று பட்டுக்கோட்டை - "திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது'' என்று பாடிவைத்தானோ? பட்டுக்கோட்டை இன்றிருந்தால், எப்படிப்பாடியிருப்பானோ? என்று நான் கேட்கமாட்டேன். ஏனென்றால், இந்தக் கொடுமை அவன் காலத்திலும் தலைவிரித்துக் கொண்டுதானிருந்தது.

சீதனம் வாங்குபவர்களை பிடித்து, மரண தண்டனை வழங்கவேண்டும் என்று கூறிய இந்த பெண் சார்ந்த வர்க்கத்தில் வந்த இன்னும் ஒரு பெண்தான் - ஒரு இளைஞனின் தாயாக இருந்துகொண்டு, பெண்ணுக்கு மாமியாராக இருந்துகொண்டு, சீதனம் வேண்டும் என்று அடம்பிடிக்கிறாள் என்றால், நகைப்பாக இருக்கிறதல்லவா. ஆனால், இதுதான் உண்மை. எந்தப்பெண் சீதனக்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டாளோ, அதேபெண்தான் சீதனம் தரவேண்டும் என தனது மகனுக்காக வாதாடுகிறாள். எந்த ஆண் தன் உறவுகளுக்குச் சீதனம் கொடுப்பதற்காக இடர்ப்பட்டானோ, அதே ஆண்தான் மகனுக்கு வீடுவேண்டும், மோட்டார் வண்டி வேண்டும், இருபத்தைந்து இலட்சம் வேண்டும் எனப் பிடிவாதமாக இருக்கின்றான்.

என்ன செய்வது, இது கலிகாலம். நான் பெற்ற இன்பம் (?) பெறுக இவ்வையகம் என்ற பெருந்தன்மையோ தெரியவில்லை. இவர்கள் கலியுகத்து அன்னம்போலும்.

அதாவது, பாலில் அழுக்கிருந்தால் பாலை விட்டு அழுக்கை உட்கொள்கின்றனர். இவர்கள் காலங்காலமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஊடகங்கள், திரைப்படங்கள் வாயிலாக இவர்களை நல்வழிப்படுத்த பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும், இவர்கள் கொஞ்சமேனும் அவற்றை சிந்திப்பதாக வில்லை.

சிலர் பிரசாரத்தில் தாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு சரி. ஊருக்கு உபதேசம், உனக் கல்லடி என்பது இவர்கள் எண்ணம்போலும். எனக்கென்னவோ "உங்களைத் திருத்தவே முடியாதடா'' என்று மக்களின் கலைஞன் விவேக்கினது பாணியில் சொல்லவேண்டும் போலிருக்கிறது.

இந்த சீதனம், அதன் பாதிப்புக்கள் எல்லாம் ஒரு சுற்றுவட்டம் என்றே கூறலாம். அதாவது, நாம் பாடங்களில் படிக்கின்றோமே நைதரசன் வட்டம், காபன் வட்டம் என்று - அவை போல இதுவும் சுழற்சிமுறையிலான ஒரு செயற்பாடாகவே இருக்கின்றது. தகப்பன் - மகளைக் கரைசேர்க்க, மகள் தன் மகளைக் கரைசேர்க்க இன்னும் ஒரு தகப்பன் தன் மகனுக்கு என, இந்த சீதனம் எந்தவேளையிலும் அடிபடும் ஒரு கரப்பந்தாக சுழன்றுகொண்டிருக்கின்றது. இந்தக்கரப்பந்து சுற்றுப்போட் டிக்கு முடிவென்பது கிடையாது. ஒருவீரர் களைத்துவிட்டால், இன்னும் ஒரு வீரர் களமிறங் கிவிடுவார். இதனை நிறுத்த



வேண்டும் எனில், அணுகுண்டு (?) 'மனச்சாட்சி' தான் போடவேண்டும்.

எது எப்படியிருப்பினும், இந்த சீதனத்தை வாங்குபவர்களாக இருப்பவர்கள் சிந்திக்க வேண்டிய ஓரிடம் இருக்கிறது.

பெண்களினை பணங்கொடுத்து ஏற்பாடு செய்தால், அது விபசாரம் என்பதுபோல, இதுவும் ஒரு நீண்டகால விபசாரமாக ஏன் கொள்ளமுடியாது?

இவர் பொறியியலாளர் - இவருக்கு எழுபத்தைந்து லட்சம். இவர் மருத்துவர் - இவருக்கு ஐம்பது லட்சம் என ஒவ்வொரு ஆண்களும் விலைபேசப்படுகிறார்கள். வேலையில்லாவிட்டால் என்ன பரவாயில்லை, அவருக்கு பத்துலட்சம் தரலாம். ஐந்து லட்சம் அந்த அற்புத மகனை ஈன்ற பெற்றோருக்கு, ஐந்துலட்சம் வங்கியில் போட்டு உன் வயிற்றை நிரப்பிக்கொள்ள எனச் சந்தை நிலவரம் போகிறது.

பெண் விபசாரமானது - ஓரளவுக்கேனும் மறைமுகமாகவே இருக்கிறது. ஆயினும், இந்த ஆண் விபசாரம் (சீதனம் சம்பந்தப்பட்டது) இருக்கின்றதே, அது பட்டப்பகலில் நிறைவேற்றப்படுகிறது.

தெருவில் கந்தையா வருகிறார். எதிரில் முருகேசு வருகிறார். "என்ன கந்தையா புது மாப்பிளைபோல வருகிறாய், யாரின்ர கல்யாணம்?'' என்றுகேட்க - "இவன் செல்லையா இருக்கிறானே, அவனின்ர கடைசிப் பெட்டைக்கு கல்யாணம்'' என்றார் கந்தையா. "யாருபொடியன், எவ்வளவு சீதனமாம்?'' இது முருகேசரின் ஆவலான கேள்வி. இது சாதாரணமாக தெருவில் இன்று சம்பவிக்கக்கூடிய உரையாடல். அந்தளவுக்கு சீதனம் வேரூன்றி இருக்கின்றது என்றால் மறுப்பீர்களா?

திருமணம் - உலகத்தில் நாம் பிறந்து வாழப்போகும் காலப்பகுதியில், பெரும் பகுதி இதன்பின்தான் ஆரம்பிக்கின்றது. இதற்கு நாம் விலை பேசுவதா? உலகில் மனிதப் பிறவிகளுக்கு இரண்டு ஜாதிதான் இருக்கிறது. ஒன்று பெண், மற்றது ஆண். இதையெல்லாம் நீங்கள் சொல்லியா நாங்க தெரியவேண்டும் என நீங்கள் நினைப்பது எனக்குப்புரிகிறது. என்ன செய்வது, அது அதுவா வருகுது. இந்த இரு இனங்களும் கூடிவாழும்போதுள்ள சுகம் - எங்கு கிடைக்கும். ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்தி, விட்டுக் கொடுத்து வாழும்போது, கிடைக்கும் இனிமையினை யாரால் விலைபேசமுடியும். ஒரு பெண் தனது இறுதி அத்தியாயத்துக்காகத் தன் உறவுகளைப் பிரிந்து, கணவனே கதியென கால் எடுத்து வைக்கும்போது, அவளைப் பார்க்காமல், அவள் அன்பைப் புரியாமல், அவள் என்ன கொண்டுவருகிறாள் என்று பார்ப்பது என்ன மடத்தனம்.

அவளுக்கு அவனும், அவனுக்கு அவளும் சீதனம்தானே. அதை விடுத்து அவள் கழுத்தில் எவ்வளவு, கையில் எவ்வளவு, கட்டிவருவது எவ்வளவு என்று பார்க்கிறானே ஒரு ஆடவன். கட்டிய மனைவியினைக் கண்கலங்காது கட்டிக்காப்பது கணவனின் கடமை என்று உணராமல், அதற்கு கூலிதரவேண்டும் என்று கேட்பதற்குச் செய்யப்படும் பந்தத்துக்குப் பெயர் திருமணமா? இதற்கு அவர்கள் பெண்களைக் கலங்காது காப்பாற்றுவோம் என்று ஒரு புதியசேவையினை தொடங்கியிருப்பார்களானால், சிலவேளை ஏற்கக்கூடிய தாயிருக்குமே.

அண்மையில் இதுபற்றி ஒரு பிரசாரக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்க, கூட்டத்தில் ஒருவர் குரல்கொடுப்பது எனக்கு கேட்கிறது. "நாங்கள் எவ்வளவு கஷடப்பட்டுப் படித்து, இந்த நிலைக்கு வந்து இருக்கிறோம். எம்மை இந்நிலைக்கு வரச்செலவழித்த பெற்றோருக்கு - நாம் என்ன கைமாறு செய்வது. அதற்கு இந்த சீதனம்தானே பதில்'' என்று அவர் கூறுகிறார். அதோ மற்றவரும் சொல்லவருகிறார் கேட்போம்- "நாம் வாழ்க்கையின் பெரும் பாகத்தை உறவுகளுக்கு ஒரு நல்லவரன் (மாப்பிள்ளை) கிடைப்பதற்கும், அவளுக்கு சீதனம் கொடுக்கவும் செலவழித்துவிட்டோம். இனி எமக்கு என்று ஒன்றும் இல்லை. அப்படியிருக்க, எமது வாழ்கையினை தொடக்க ஒரு முதலாக இந்த சீதனத்தை வாங்குகிறோம்'' என்கிறார் ஆதங்கத்துடன். அவர் என்ன சொல்கிறார்? "நாம் என்ன இளிச்சவாயன்களா? நான் இன்று மருத்துவராயிருக்கிறேன்.

(தொடரும்....)

ஊரோடி

# ஆஸ்துமாவும் அதனைத் தடுக்கும் முறைகளும்

மனித உறுப்பில் முக்கியமான உறுப்பு நுரையீரல். ஒரு மனிதன் உயிருடன் இருக்கிறான் என்பதை உணர்த்துவது அவன் விடும் மூச்சுத்தான். இருதயத் துடிப்பு நின்று விடுவதால், உயிர் பிரிகிறது என்பது உள்ளோட்டமான விடயம். அவன் உயிரோடு இருக்கிறான் என்பதை உணர்த்துவது அவன்விடும் சுவாசம்தான். இதற்கு நுரையீரல் பாதிப்புக்குள்ளாகாமல் இருப்பது மிகமிக அவசியம்.

நுரையீரல் பாதிப்படைவதினால், ஆஸ்துமாநோய் ஏற்படுகிறது. நம் உடலின் மார்பறையில் உதரவிதானம் என்ற சுவாசத் தசைக்கு மேலே, இரண்டு நுரையீரல்கள் உள்ளன. சுவாசமண்டலம் என்று பார்த்தால் - மூக்கு, மூச்சுக்குழல், மூச்சுக்கிளைக்குழல், மூச்சுநுண்குழல்கள் மற்றும் காற்று நுண்ணறை போன்ற பகுதிகள் உண்டு. இதில் முக்கியமாக **Bronchial** எனப்படும் மூச்சுக் கிளைக் குழல்கள் பாதிக்கப்படும்போது, ஆஸ்துமா ஏற்படுகிறது.

### ஆஸ்துமாவில் மூன்று வகை உண்டு

1. Bronchial Asthma - **மூச்சுக் கிளைக் குழல்கள் பாதிக்கப்படும் போது இது ஏற்படும்.**
2. Cardiac Asthma - **இது இருதயநோயால் ஏற்படுவதாகும்.**
3. Renal Asthma - **இது சிறுநீரகக் கோளாறுகளால் ஏற்படுவதாகும்.**

எப்படி இரத்த அழுத்தம், சிறுநீரகக் கோளாறுகள், நீரிழிவு நோய் ஒன்றை ஒன்று பிரிவதில்லையோ, அதேபோல் ஆஸ்துமாவும் - சிறுநீரகங்களையும், இருதயத்தையும் விட்டுப்பிரிவதில்லை. நுரையீரலுடன் இவைகளையும் சேர்த்துப் பாதிப்புக்கு உட்படுத்துகிறது. இந்த நோயின் அறிகுறிகள், அது பாதிப்புக்குட்படுத்தும் உறுப்புக்களைப் பொறுத்து வேறுபடுகிறது.

### ஆஸ்துமா என்றால் என்ன?

இதன் முக்கிய அறிகுறி - மூசசிரைப்பாகும். சில காரணங்களினால், மூச்சுக்கிளைக் குழல்கள் சுருங்கிவிடுகின்றன. மூச்சுக்கிளைக் குழல்கள் சுவாசமண்டலம் மெண்மையான சவ்வால் **(Fibroid Tissue and Mucous Membrane)** ஆனவை.

இந்தப் பாதையில் காற்றைதத வ்ர, வேறு எந்த மிக நுண்ணிய அந்நியப் பொருட்கள் இந்தப் பாதையைத் தொட்டாலும், அந்த மென்மையான சவ்வுகள் சுருங்கிவிடும். அதை **Bron cial Constriction** என்கிறோம். இவ்வாறு சில காரணங்களால் மூச்சுக்கிளைக் குழல்கள் சுருங்கும்போது, நுரையீரலுக்குச் செல்லும் பிராணவாயு அளவு குறைந்து, மூச்சு இரைப்பு ஏற்படுகிறது - இதையே ஆஸ்துமா என்கிறோம்.

### ஆஸ்துமாவிற்கான காரணங்கள்

திடீரென ஆஸ்துமாநோய் தாக்குவதில்லை. எந்த வயதில் நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறதோ, அந்த வயதில் அதற்கான அறிகுறிகளும் தென்பட ஆரம்பிக்கும்.

ஆஸ்துமா பெரும்பாலும் ஒவ்வாமையால் **(Allergy)**, சீதோஷ்ணநிலை மாற்றம், காற்று, தூசிகள், வாகனங்களின் புகைகள், சிகரெட்புகை, சாம்பிராணிப்புகை, இரசாயனப் பொருட்கள் கலந்த உணவுவகைகள், மாத்திரைகள், நீண்டநாள் மலச்சிக்கல், நோய் எதிர்ப்பு சக்தியின்மை, உடலுழைப்பு இன்மை, மனக்கவலை போன்ற காரணங்களினால் ஆஸ்துமா உண்டாகலாம்.

### நோய்க்கான அறிகுறிகள்

உடம்புக்கு ஒவ்வாத நச்சுப்புகை, தூசிகள் போன்றவை மூச்சுக்கிளைக் குழலை அடையும்போது - தும்மல், இருமலோடுகூடிய மூச்சிரைப்பு ஏற்படும். குளிர்ந்த காற்றைச் சுவாசிக்கும்போது, மூச்சுக்கிளைக குழல்கள் சுருங்கி, தேவையான பிராணவாயு கிடைக்காதபோது, சளியோடுகூடிய மூச்சிரைப்பு ஏற்படுகிறது. எனவே தும்மல், சளி, இருமல், மூச்சிரைப்பு போன்றன தோன்றும். இதில் உள்ளிழுக்கும் காற்று, வெளியேற்றும் காற்றைவிட வேகமாக மூச்சுத்திணறல் ஏற்படும். மூச்சுவிடும்போது, விசில் சத்தம், புறாகூவும் சத்தம்போன்று ஒரு இரைச்சலோடு மூச்சுவிடுவார்கள். மூக்குவிரியும், கழுத்து நரம்பு புடைக்கும், கூனி இருப்பர், படுக்கமுடியாமை - ஆஸ்துமாவுக்கு ஈஸ்நோபீலியா என்பதும் ஒரு அறிகுறியாகும்.

ஒருவரின் **Normal Breath Rate** ஒரு நிமிடத்துக்கு குழந்தை பிறந்தவுடன் 40-70 முறையும், 5-10 வயதில் 25-30 முறையும், 10-15 வயதில் 20-22 முறையும், 15 வயதிற்கு மேல் 16-20 முறையும் இருக்க வேண்டும். இதற்கு மேல் செல்லும்போது, ஆஸ்துமா என்கின்றோம். ஈஸ்நோபீலியா நோயின் அறிகுறியாகும். மற்ற நோய்களைவிட, ஆஸ்துமாவில் அதிக எண்ணிக்கையில் உயரும் **Normal Eosinophils** 3-7 என்றளவு இதன் அளவு உயரும்போது, நம் உடலில் தொற்றுக்கிருமிகள் சென்றுள்ளதை அறியலாம்.

சளி, இருமல், தும்மல், மூக்கில் நீர்வடிதல், போன்றன இரத்ததில் ஈஸ்நோபில் அதிகமாகும், அறிகுறிகளாக தோன்றும்.

### இருதய நோயால் ஏற்படும் ஆஸ்துமா (Cardiac Asthma)

இதில் மூச்சுத்திணறல், வேகமான, நாடித்துடிப்பு, நெஞ்சுவலி, படபடப்பு போன்றவை ஏற்படும். பகலைவிட இரவில்தான் அதிகமான மூச்சுத் திணறல் ஏற்படும்.

### சிறுநீரகக் கோளாறினால் ஏற்படும் ஆஸ்துமா (Renal Asthma).

சிறுநீரகம் பாதிப்படையும்போது, இரத்ததில் யூரியா கிரியேட்டனின், பொட்டாசியம், சோடியம் குளோரைட்டு போன்ற கழிவுப்பொருட்களும் உற்பத்தியாகும். சிறுநீரும் போதுமானளவு வெளியேற்றப்பட முடியாமையால், நுரையீரல் முதல் பல உறுப்புக்களில் நீர்த்தேக்கம் ஏற்பட்டு, மூச்சுத்திணறல் ஏற்படுகிறது.

ஆஸ்துமா நோயின் இறுதிக்கட்டத்தை **Chronic Obstructive Pulmo Nary Disorders)** என்று கூறுவர். ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்தல்வேண்டும். மூச்சுக்கிளைக் குழல் சுருங்கி, காற்றுச் செல்லும் பாதை 90 சதவதம் அடைபட்டுவிடும். இதனால், பிராணவாயு கிடைக்காததால், மூச்சுத்திணறல் ஏற்படும். ஆஸ்துமா நோயாளிகள் ஒவ்வாமைகள் தம்மை தாக்காதவாறு, உடலில் நோய் எதிர்ப்புசக்தி அதிகரிக்கக்கூடிய மூலிகைகள், உணவுகளின் மாற்றங்கள், எளிய உடற் பயிற்சிகள் என்பனவற்றை பின்பற்றினால், நோயின்றிப் பாதுகாக்கலாம்.

### மூலிகைகள்.

வேப்பிலை, வில்வம், அத்தியிலை, துளசியிலை, தூதுவளை, ஆடாதோடை, நெல்லி, கற்பூரவள்ளி, (சுக்க, மிளகு, மஞ்சல் சிறிதளவும்) பொடிசெய்து, சம அளவில் எடுத்துக் கொள்ளவும். பின் இதில் 2 கரண்டி தூளுக்கு ஒரு கப் நீர் கலந்து, உணவு உண்பதற்கு 1 மணித்தியா லத்துக்கு முன்பாக - தினமும் காலை, பகல், இரவு என மூன்றுவேளையும் உட்கொள்ள வேண்டும்.

### உணவு முறை.

சாதாரணமாக எளிதில் ஜீரணமாகும் சைவ உணவுகளை உட்கொள்ளவேண்டும். ஒவ்வொரு வேளையும் முக்கால் வயிறு ஆகாரம் உட்கொள்ளவும். இரவு 6 மணிக்குமுன் சாப்பிடவேண்டும்.

உணவில் கோதுமை, காய்கள், பழங்கள் உட்கொள்ளவேண்டும். இந்த நோயாளிகள் நாவல், தோடம் பழம் கரட், வெள்ளரிக் காய், கரும்புச்சாறு, இளநீர், வெங்காயம், கொத்தமல்லி இலை, தூதுவளை, துளசி, செம்பருத்திப் பூச்சாறு என்பவற்றை குடிக்கவும்.

கிரந்தி உணவுகளான - இறால், நண்டு, கணவாய், தக்காளி, கத்தரி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பயிற்றங்காய் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். எனினும், தாங்கள் எடுக்கும் உணவில் ஒவ்வாமை அறிந்து தவிர்ப்பது சிறந்ததாகும்.

சிலநேரங்களில் - பகல் உணவை 2 நாட்களுக்கு ஒருமுறை தவிர்த்து, அந்த நேரத்தில் சாதாரண நீர், பழச்சாறு என்பன அருந்தலாம். உடற் பயிற்சி- தினமும் காலை, மாலை செய்தல் வேண்டும், உணவுக்கு முன்பு காலை, பகல், மாலை நேரங்க ளில் மூச்சுப் பயிற்சி செயதல்வேண் டும். புகைத்தல், மது வகைகள், பால், பால் கலந்த உணவுகள், சர்க்கரை, இனிப்புகள் தவிர்க்க வேண்டும்.

காற்றோட்டமில்லாத இடங்களைத் தவிர்க்கவேண்டும். மனதைப் பாதிக்கும் சம்பவங்கள், கவலை, பயம், மன உழைச்சல், அடிக்கடி உணர்ச்சிவசப்படல், போன்றவற்றாலும் ஆஸ்துமா அதிகரிக்கும்.

### சிகிச்சை.

**ஆசவ, அரிஷ்டங்களாக**

கனகாசவம், திராஷ்டரிவும், ஆடாதோடைப்பாணி, பிப்பிலியாசவம், மதுகா, தசமூலம்.

**சூரண்யம்**

தாலிசாதி, சீதோபலாதி, சுக்கு, நிலபாவல்.

**குளிகை**

புன்னைவேர் குளிகை, சுவாச குடோரி, சின்னசிகப்பு.


**கல்க:- புத்தராஜா கல்கம்.**

அனுமானம்:- இஞ்சி, தேன், எலுமிச்சைச் சாறு, நெஞ்சுக்கு கற்பூர தைலம், சர்சபாதி தடவலாம். சளியை இழக்கி வெளியேற்றும்.

ஜ

**டாக்டர்:- திருமதி தவமலர் விஜயரட்ணம் சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரி வலி. தென் மேற்கு பிரதேசசபை ஆனைக்கோட்டை.**

# தேங்காய்ப்பால் கேசரி



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| ரவை | - 2 கப் |
| தேங்காய்த்துருவல் | - 2 கப் |
| சீனி | - 5 கப் |
| கேசரிப்பவுடர் | - சிறிதளவு |
| பிளம்ஸ் | - 100 கிராம் |
| கஜு | - 100 கிராம் |
| எசன்ஸ் | - 1 தேக்கரண்டி |
| சாதிக்காய் | - பாதி |
| ஏலக்காய் | - 7 |
| நெய் | -1/2 போத்தல் |
| தேங்காய் எண்ணெய் | -1 தேக்கரண்டி |

தேங்காயயைத் துருவி, அரைத்துப் பால் எடுக்கவும். ஏலக்காய், சாதிக் காயை சூடுகாட்டிய பின் இடிக்கவும். தாச்சியை அடுப்பில் வைத்து, 1 தேக்கரண்டி நெய்யை விட்டுக் காய்ந்ததும் ஏலக்காய், சாதிக் காய்த்தூளைப் போட்டுக் கிளறியபின் தனியாக எடுக்கவும். பின் தாச்சியில் தேங்காய்ப்பாலுடன் கேசரிப்பவுடர், 3 கப் சீனியைப் போடவும். தேங்காய்ப்பால் கொதித்து திரளமாக இருக்கும்போது, நெருப்பைக் குறைக்கவும். சீனி கரைந்ததும், ரவையைப் போட்டுக் கிளறவும். ஏலக்காய், சாதிக்காய்த்தூள், நெய் மற்றும் மிகுதிச் சீனியையும் போட்டுக் கிளறவும்.

பிளம்ஸ், கஜு என்பவற்றை நெய்யில் பொரித்து, அதனுள் கொட்டவும். கலவை தாச்சியில் ஒட்டாமல் வரும்போது, தேங்காய் எண்ணெயை ஊற்றிக் கிளறவும். கடைசியில் எசன்ஸை விட்டுக் கிளறி இறக்கவும். தேங்காய்ப்பால்கேசரி தயார் - சுவைத்து மகிழுங்கள்.

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

## பயணம்



குழந்தைக்கு ஒன்றரை வயதானால்போதும். வெளியில் செல்வதற்குத் துடிக்கும். மற்றவர்களின் செருப்புக்களைப் போட்டுக்கொள்ளத் தொடங்கும். அதாவது, டாடடா சொல்லவேண்டுமெனக் குழந்தை அடம்பிடிக்கும். எனவே, நேரம் கிடைக்கும் போதெல்லாம் வெளியில் அழைத்துச் செல்லுங்கள்.

எங்கே குழந்தையை அழைத்துக்கொண்டு போவது? குழந்தையைப் பார்த்துக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும் என்ற தாயாரின் புகார் - நியாயமானதுதான். கடைக்குச் செல்லும்போது, குழந்தையை அழைத்துச் சென்றால், தேவையான பொருட்களை வாங்கவும் முடியாது. குழந்தையை சரியாகக் கவனித்துக்கொள்வதும் கஷ்டம்.

ஆனால், பூங்கா போன்ற இடங்களுக்கு குழந்தையை அழைத்துச் செல்வதில் என்னதடை? குழந்தை நடக்கவும், ஓடவும், பயிற்சி செய்யவும் பூங்காக்கள்தான் ஏற்ற இடங்களாகும். வீசும் காற்றுக்கூட தூய்மையாக இருக்கும்.

குழந்தையைப் பூங்காவில் சுதந்திரமாக நடக்கவோ, ஓடவோ விடுங்கள். காலிலோ அல்லது கையிலோ தட்டுப்படும் ஒவ்வொரு பொருளும் - அதற்குப் புதிய அனுபவமாக இருக்கும். ஏதாவது ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு இருக்கும் காக்கையுடனோ, அணிலுடனோ குழந்தை பேசலாம். இதெல்லாம் குழந்தைக்கு அற்புதமான அனுபவங்கள். பூங்காவில் வந்திருக்கும் அறிமுகமாகாத குழந்தைகளோடு, உங்கள் குழந்தை விளையாடத் தொடங்கினால் கவனம் தேவை. மென்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்பது தெரியாத காலகட்டம். சண்டை, சச்சரவு ஏற்பட்டால் அதைத் தவிர்த்து விடுங்கள்.

குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகும்போது நப்கினையும் எடுத்துச் செல்லுங்கள். பயணத்தின்போது, குழந்தைக்கு காய்ச்சல் ஏற்படலாம். பயணத்தில் வாந்தி எடுத்தால், குழந்தையை உட்கார வைத்துக் கொள்வது நல்லது. முடிந்தளவு யன்னலோரமாகக் குழந்தையை உட்கார வைத்துக் கொள்ளுங்கள். புதிய காற்று வீசுவது நல்லது. பொதுவாக வீட்டில் சாப்பிடுவதைவிட, குறைந்தளவு உணவைத்தான் குழந்தை பயணத்தின்போது சாப்பிடுகின்றது. எனவே, பயணத்தின்போது எதையும் சாப்பிடும்படி குழந்தையைக் கட்டாயப்படுத்தவேண்டாம். சுட்டாறிய நீரை எடுத்துச்செல்ல மறந்துவிடாதீர்கள். பெரும்பாலான நோய்கள் தண்ணீரின் மூலமாகத்தான் பரவுகின்றன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்*
*தமிழ் பழமொழி.*

## நமது நோக்கு

### தமிழ் மீனவர்களை பாதிக்கும் இந்திய மீனவரின் அத்துமீறல்கள்

ஊர்காவற்துறைப் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த அறுபதிற்கும் அதிகமான மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ளது தெரிந்தவிடயமே.

இந்திய மீனவர்கள், ஈழத்தமிழ் மீனவர்களின் கடற் பிராந்தியத்தில் அடாவடித்தனமாக நுழைந்து கடல்வளங்களைச் சூறையாடுவதொன்றும் புதிய விடயமல்ல. காலங்காலமாக இந்த அத்துமீறல் செயற்பாடுகளை திட்டமிடப்பட்டவகையில் வேண்டுமென்றே இந்திய மீனவர்கள் செய்துவருகின்றனர். சிறிலங்காவில் போர் காரணமாக, வடக்கு - கிழக்கின் கரையோர மீனவர்களின் வாழ்க்கையானது, கடற்படையினரின் ஈவிரக்கமற்ற தாக்குதல்கள் மற்றும் மனிதநேயமற்ற கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் முற்றாகவே சீர்குலைந்து, பெரும் அவலங்களுக்குள்ளான அந்த மக்கள், தமது கரையோர வதிவிடங்களை விட்டும் துரத்தப்பட்டமை ஒரு சோக வரலாறாகும்.

வடக்கு - கிழக்கின் பெரும் செல்வங்களில் ஒன்றான கடல் வளமானது, லட்சக்கணக்கான மக்களுக்கு உணவை மட்டுமல்ல, உழைப்பையும், வாழ்வையும்கூட உத்தரவாதப்படுத்தியிருந்தது ஒருகாலத்தில்...

தமிழ்மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனஅழிப்பு யுத்தமானது - உயிரைப் பணயம்வைத்து, கடலோடும், வாழ்வோடும் போராடி தன்மானத்துடன் உழைத்துப்பிழைத்து வந்த தமிழ் மீனவர்கள், இயல்பு வாழ்வோடு விளையாடத் தொடங்கியபோது அவர்களின் வாழ்வில் அஸ்தமனம் ஆரம்பமாயிற்று.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் யுத்தமா, சமாதானமா என்ற சவாலைத் தொடர்ந்து, அவரால் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக நியமிக்கப்பட்ட லலித் அத்துலத்முதலி, வெறும் முப்பதே நாட்களில் பயங்கரவாதத்தை முற்றாகத் துடைத்தழித்து விடுவேன் என சூளுரைத்துவிட்டு, தமிழ்மக்களுக்கு எதிராக படைநடவடிக்கையை, என்று ஆரம்பித்தாரோ அன்றே கடலோர மக்களின் வாழ்க்கை அவலங்களைச் சந்திக்கத்தொடங்கி விட்டது.

அதே 'முதலி'யால் அறிமுகப்படுத்தப்பட்ட கடல்வலயச் சட்டம் கடற்கரையின் இதயத்தை துடிப்புறச் செய்தது.

மீனவ மக்களின் 'ஏலேலோ' பாடல் இசைக்கமறந்ததொன்றாயிற்று. பாய்விரித்து அலைகிழத்துச் செல்லும் படகுகள் கரையில் கவிழ்ந்து படுத்துக்கொண்டன.

மீனவர்கள் தமக்கான வாழ்வை இழந்துவிட்ட வாழ்வொன்றை எதிர்கொள்ளவேண்டியவர்களாயினர்.

அலை இரைச்சலை அடக்கி மேலோங்கும் மீனவ மக்களினது கலகலப்பான வாழ்விசையானது மௌனித்துப் போயிற்று.

மீனவர்களையும், படகுகளையும் தேடிக்களைத்து, கரை வந்துபோகும் அலைகள் மட்டும் ஓயாது அவர்களைத் தேடிக் கொண்டிருந்தது.

தன்னை நாடிவந்து நம்பிக்கையுடன் வலைவீசும் மீனவர்களின் வருகைக்காக தன்மடி நிறைந்த மச்ச வளங்களுடன் காத்திருப்பை மேற்கொள்ளும் கடலம்மா ஏமாற்றத்தால் தவித்துத்தான் இருப்பாள்.

அவளுக்கு கடல்வலயச் சட்டம் பற்றியும், கடற்படையினரின் இரக்கமின்மை குறித்தும் யார்தான் சொல்வார்கள்.

அப்பப்போ கடலும் அதிரும். கரையும் அதிரும். கஷ்ரம் தாழாது கடல்தாய்மடிதேடி துணிந்துபோன மீனவர்களின் உயிரற்ற உடலை இரத்தம் தோயத்தோய அலை சுமந்துவந்து கரைகளில் படுக்கவைத்துச் செல்லும்.

இது தொடர்கதையாக மாறியபோது கரை வெறுமையாகியது. மக்களற்ற சுடுகாடுகளாக மாறிய கடற்கரையின் கடலில் இருந்து சீறிவரும் குண்டுகள் மட்டும் அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

அந்நிய ஆதிக்கத்தால் வடக்கு - கிழக்கின் கரையோரம் கபளீகரம் செய்தல் ஆரம்பமாயிற்று.

உரியவன் இல்லையாயின் உள்ளவன் உள்ளதை எல்லாம் அள்ளிக்கொள்ளல் இயற்கைதானே.

சுமார் இரு தசாப்தகால அவலம் மீனவமக்களின் இருப்பை முற்றாக சிதைத்திருந்த பின்னர், சமாதானம் வந்ததாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் தமது சொந்த வாழ்விடக் கரைக்கு வந்தவர்களுக்கு சமாதான உரிமைகள் எதனையும் அவ்வளவு சுலபமாக வழங்கிவிடவில்லை.

எல்லாவற்றிற்கும் அவர்கள் போராடவேண்டியவர்களாக ஆகினர்.

கடல் வலயச் சட்டங்கள் தளர்த்தப்பட்டதேயொழிய நீக்கப்படவில்லை. வந்த சமாதானத்திற்கும் அதனைச்செய்ய வலுவே இல்லை. கடற்படையினரின் ஆதிக்கவெறி அதற்கு இடமளிப்பதாகவும் இல்லை. ஆனால், அந்நியர் சக்திகள் தமிழ் மீனவர்களின் உரிமைப் பிராந்தியத்தில் மீன்பிடிக்க அரசே அனுமதி அளித்ததுதான் துரோகமாகும்.

தாய்லாந்துக்காரர், சீனாக்காரர், பாகிஸ்தானியர், இந்தியர்கள் என அனைவரும் எமது கடல் பிராந்தியத்தினுள் ஊடுருவி, எமது மக்களுக்கான வளம் அனைத்தையும் கொள்ளையிட சிங்கள கடற்படை பார்த்துக்கொண்டுதான் இருந்தது.


சிலவேளைகளில் இந்திய மீனவர்கள் சுடப்பட்டதும், அவர்களின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதும், கைதுசெய்யப்பட்டதும் உண்டு.

இதற்கு அவர்களை தமிழர்களெனக் கடற்படை பார்த்தது தான் காரணம். இப்பொழுதும்கூட கைதான மீனவர்கள் கூட்டமாக ஒரு அத்துமீறலை மேற்கொண்டவர்கள்தான்.

முன்னரும் பல தடவைகள் எமது மக்களின் கடற்பரப்பினுள் அத்துமீறி தங்களின் வள்ளங்கள் மூலம் எமது மீனவர்களின் வலைகளைச் சிதைத்து அவர்களைத் தாக்கி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திய கைங்கரியத்தை இந்திய மீனவர்கள் செய்துள்ளனர்.

உள்நாட்டில் இராணுவ மற்றும் கடற்படையினரின் அட்டூழியங்களால் அரசின் மனிதநேயத்திற்கு மாறான சட்டங்களால் இரு தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்து அல்லறும் தமிழ் மீனவர்கள், தற்போது அந்நிய ஆக்கிரமிப்பு மீனவர்களாலும், தமது கடல் வளமும் வாழ்வும் சுரண்டப்படுவதாலும், அழிக்கப்படுவதானாலும் இந்தச் சமாதானக் காலத்திலும் அவலங்களைத் தொடர்ந்து எதிர்கொள்ளவேண்டி நிற்பது, சகித்துக் கொள்ளமுடியாததொன்றாகும்.

## நாடும் நடப்பும்




### அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட

# தேசிய வருமான சட்டமூலத்தை கண்டித்து சுங்க அதிகாரிகள் எதிர்ப்பு நடவடிக்கை!

தேசிய வருமான சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து, சுங்க அதிகாரிகள் நேற்று பணிப்பயிற்சித் தடுப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இந்தப்பயிற்சித் தடுப்பில் ஈடுபட்டபோதிலும், நேற்றே முழுமையாக இந்த பணிப்பயிற்சித் தடுப்பு ஏற்படுத்தப்பட்டது.

ஏற்றுமதி மற்றும் விமானநிலைய சுங்க அதிகாரிகளைத் தவிர்ந்த, இறக்குமதி மற்றும் ஏனையபிரிவு சுங்க அதிகாரிகள்- இந்தப் பணிப்பயிற்சித் தடுப்பில் ஈடுபட்டுள்ளார்கள். ஏற்கனவே இது தொடர்பாக அரசாங்கத்துக்கும், சுங்க அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

தேசிய வருமான சட்டத்தை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது பற்றிப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

சுங்க அதிகாரிகள் எந்தவொரு ஆலோசனையும் இல்லாமல், அமைச்சரவையில் தேசிய வருமான சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை முறையற்றசெயல் என்றும், இதனை விலக்கிக்கொள்ளும்வரை, தாங்கள் போராட்டத்தை நடாத்தவுள்ளதாகவும் - சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்க அதிகாரிகளின் இந்தப் போராட்டத்தினால், கொழும்பு துறைமுகத்திலும், ஏனைய துறைமுகங்களிலும் இறக்குமதி சேவைகள் மிகவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (01)

### இலங்கை அரசாங்கத்தால்

## ஒருதொகுதி தேயிலை ஈராக்கிற்கு அனுப்பப்பட்டது

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஒருதொகுதித் தேயிலையை ஈராக்கிற்கு இலவசமாக வழங்கியுள்ளது.

இதற்கான நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. பெருந்தோட்டத்துறை, கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல - தேயிலையை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஈராக்கிற்கு அனுப்பியுள்ளார்.

இந்தத் தேயிலையின் மொத்தப்பெறுமதி 12 மில்லியன் ரூபா ஆகும். ஏற்கனவே ஈராக் - இலங்கையின் தேயிலையைப் பெருமளவில கொள்வனவு செய்த நாடு என்றவகையில், அந்த நாடு, தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில், அந்தநாட்டு மக்களுக்கு உதவுகின்ற வகையில், இந்த தேயிலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (01)

## ஒருநாள் வேலை நிறுத்தத்தால் 60 மில்லியன் ரூபா இழப்பாம்!

(கொழும்பு)

தனியார் பஸ்உரிமையாளர் சங்கத்தினர் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட வேலைநிறுத்தத்தால் - தலா 60 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டிருந்ததாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தகவல் தருகையில்,

வேலைநிறுத்தத்தால் ஏற்பட்ட வருமான மாற்றம் கொடுத்த இழப்பின் செலவு 60 மில்லியன் ரூபாக்களாகும் இந்த வேலை நிறுத்தத்தால் 70 பஸ்கள் சேதமாக்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை,தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் வேலை நிறுத்தங்களை மேற்கொண்ட கடந்த திங்கட்கிழமை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை 28 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றதாக சபையின் பிரதம நடவடிக்கை முகாமையாளர் டபிள்யூ செ.குணதிலக தெரிவித்தார்.

# ச.தொ.ச.வின் 40 வீத பங்குகள் தனியார் நிறுவனத்திற்கு விற்பனை

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (ச.தொ.ச) சில்லறை விற்பனைப் பிரிவின் நாற்பது சதவீத சொத்து மற்றும் முகாமைத்துவத்தை தனியாருக்கு விற்பனை செய்வதற்கான, ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

கார்கன் கம்பபச், றிச்சர்ட் பீரிஸ் அன் கொம்பனி மற்றும் சிலோன் பிஸ்கட்ஸ் கொம்பனி ஆகிய நிறுவனங்கள் இணைந்து, இன்ரநஷனல் குறொசர்ஸ் அலயன்ஸ் கொம்பனி என்ற பெயரில், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் 40 சதவீத பங்குகளைக் கொள்வனவு செய்திருக்கிறது.

இந்த விற்பனையின் மூலமாக, அரசாங்கம் 680 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய வரவு – செலவுத் திட்டத்தில் 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

### திறைசேரி வட்டாரங்கள் தகவல்

2004 ஆம் ஆண்டுக்கான புதிய வரவு செலவுத்திட்டத்தில் நாடு முழுவதுமுள்ள 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் , இவ்வளவு தொகையான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வழங்குவது இதுவே முதல் தடவை என்று, திறைசேரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கிராம அபிவிருத்தி தொடர்பான வேலை வழங்கவுள்ளதாகவும், இந்த இளைஞர் யுவதிகள் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

முதலில் பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்படும் இவர்களுக்கு, அரசியல் தொடர்பான பயிற்சியளிப்பதுடன், அவர்கள் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் கடமையாற்றுவர்.

முதலில் 5 ஆயிரம் பேர் சேர்த்துககொள்ளப்படுவர் என்றும், ஏனைய 20 ஆயிரம் பேர் குறுகியகால இடைவெளியில் இந்தச் சேவையில் இணைக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

# இந்த வார பலன்கள்

## 05.12.2003 ~ 11.12.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | சந்<br>ராகு | | சனி |
| செவ்<br>யுரே | 05 இ. 12.46 மீன-செவ்<br>06 இ. 12.18 இட-சந்<br>09 மா. 5.55 இட-சந்<br>11 பி.இ.. 5.44 கட-சந் | | |
| நெப் | | | குரு |
| புதன்<br>சுக் | சூரி | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியிற் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை, பணநிலை நன்றாக இருக்கும். மகிழ்ச்சியும், புரிந்துணர்வும் ஏற்படும். தொழில்வளம் நன்றாக இயங்கும். பொருள்வரவு பலவகையிலும் கிடைக்கும். குடும்பப் பெண்கள் சந்தோஷத்துடன் வீட்டுக் கருமங்களை ஆற்றுவார்கள். பிள்ளைகள் தூரதேசத்திலிருந்து வருகை தருவார்கள். வீட்டில் கலகலப்பும் குதூகலமும் காணப்படும். தேகசுகம் பாதிப்படைய இடமில்லை. உத்தியோகத்தவர்களுக்கு வசதிமிக்க இடப்பெயர்வுகளும், அதிகாரிகளின் பாராட்டுகளும் கிட்டும். திருமணம் முதலிய கருமங்கள் விரைவில் கைகூடும். காணிவீடு சேரும் பலனுண்டு. வர்த்தகர்கள் கூடிய இலாபம் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் கூடிய நாட்டம் கொள்வர்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு குடும்பத்தில் அமைதியான வாழ்க்கை கிட்டும். பணவரவு வாய்ஓரளவு காணப்பட்டாலும், செலவுகள் அதிகமாகவே கொண்டிருக்கும். இனபந்துக்களிடையே உறவுகளில் விரிசல் தோன்றும். திட்டமிட்டு எக்கருமத்தையும் செய்யமுடியாத நிலைதோன்றும். கொடுக்கல் வாங்கல்களில் தொல்லைகள் ஏற்படலாம். தேகநிலை பாதிப்பில்லாமல் இருந்தாலும், மனச் சோர்வும் ஊக்கமின்மையும் தோன்றும். திருமண முயற்சிகள் தாமதத்தின் மேல் கைகூடும். வெளி நாட்டுப் பிரயாணங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்கள் கருமங்களை செய்வதில் உற்சாகம் குறைந்துகாணப்படுவர். மனதில் ஒருவித வரக்தி காணும். வர்த்தகர்கள் தமது முதலீடுகளால் குறைந்த இலாபத்தையே பெறுவர். மாணவர்கள் பொதுவாக ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

இவர்கள் தொழில் முயற்சிகளில் நல்ல ஊக்கம் உடையவர்களாகக் காணப்படுவர். குடும்பத்தில் நல்லுறவும் அன்னியோன்னியமும் தென்படும். பொருளாதார வருவாய் மேம்படும். குடும்பப் பெண்கள் குடும்பம் நடத்துவதில் திருப்தி அடைபவர்களாக இருப்பர். தூரதேசத்தில் இருந்து நற்செய்திவரும். நண்பர்களின் வரவும் உதவிகளும் உண்டு. மணவாழ்க்கையில் இணைய விரும்புபவர்களுக்கு உகந்த காலமாகக் காணப்படும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். உத்தியோகத்தர் திருப்தியுடனும் உற்சாகத்துடனும் கருமமாற்றுவார்கள். வியாபாரிகளுக்கு கூடுதலான வருவாய் கிடைக்கும். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியும் பாராட்டும் பெறுவர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு முயற்சிக்கேற்ப வருவாய் கிடையாது. குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றும். எவ்வளவு முயற்சி செய்தாலும் பற்றாக் குறை இருந்துகொண்டே இருக்கும். இதனால் மனச்சஞ்சலமும், நிம்மதிக் குறைவும் காணும். குடும்பப் பெண்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர். இடையிடையே தேகசுகமும் பாதிப்படையலாம். தொடங்கும் கருமங்கள் தாமத நிலையைக்கொண்டிருக்கும். திருமணம் முதலான நற்கருமங்கள் தாமதமாகிக்கொண்டே செல்லும் உத்தியோகத்தர்கள் வேலைப்பழு காரணமாக உற்சாகம்குறைந்து காணப்படுவார்கள். விவசாயிகள் கூடியஇலாபம் பெறுவர். வர்த்தகர்களுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தூரதேச பிரயாணங்கள் ஏமாற்றத்தைத் தரும். மாணவர்களுக்கு மத்திமமான முன்னேற்றமே காட்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

குடும்பஸ்தர்களுக்கு கணவன் மனைவியிடையே சிறு சச்சரவுகள் தோன்றும். எனினும் அவை உடனுக்குடனே தீர்க்கப்படும். பணவரவு செலவுக்கேற்ப கிடைக்கும். எப்படியும் சிக்கனத்துடன் வாழ்ந்தால் கடன் தொல்லைகள் இல்லாமல் வாழ்க்கை நடக்கும். பொதுக்கருமங்களில் கூடுதலாக ஈடுபடுவர். திருமணம் முதலான சுபகருமங்கள் தாமதத்தின் மேல் வெற்றியளிக்கும். புதிதாக உத்தியோகத்தை விரும்புவோருக்கு கருமம் கைகூடும். உத்தியோகத்தை வகிப்பவர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள்ஏற்படினும் தமது சாமர்த்தியத்தால் அவற்றைச் சமாளிப்பர். தேக சௌக்கியத்தை பேணுதல் நன்று. வர்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடைபெறும். பண நிலையும் நன்று. மாணவர்கள் மனதை ஒரு வழிப்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் பல நற்பலன்கள் கிட்டும். தொழில் ஸ்தானம் சிறப்பாக இருக்கும். பணவருவாயும் சிறப்பாக இருக்கும். சமூக சேவைகளில் ஈடுபடும் பெரியோர்களின் வரவேற்பும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்பட இடமுண்டு. திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு திருமணம் நிச்சயப்படுத்தப்படும். உத்தியோகத்தர்களுக்கு செய்தொழில் முன்னேற்றமும் பாராட்டுகளும் கிட்டும். மேலதிகாரிகளின் உதவியும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் நிகரற்ற இலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும் சித்தியும் உண்டாம்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

இவர்களுடைய ஜென்மராசிக்கு வியாழன் 11 இல் சஞ்சரிப்பதால் பல நன்மையான பலன்கள் உண்டு. தொழில் முறையில் நல்ல இலாபம் கிட்டும். செலவுகள் கூடுதலாக இருப்பினும் அதற்கேற்ற வருவாய் உண்டு. குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு மலரும். புத்திரர்களாலும், நண்பர்களாலும் உதவிகள் கிடைக்கும். மன சந்தோஷமும் குதூகலமும் ஏற்படும். திருமணமாகாதோருக்கு அதற்கான ஏற்பாடுகள் நடைபெறலாம். தூரப் பிரயாணத்தை மேற்கொள்ள இருப்போர் நன்மை பெறுவர். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் கருமங்களில் ஈடுபடுவர். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் நல்ல விலை போகும். பணமும் சேரும். மாணவர்கள் அக்கறையுடன் படித்துச் சித்திபெறுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசிக்காரருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் முன்னேற்றங்களைத் தடைப்படுத்தும். எவ்வளவு முயன்றாலும் பணவருவாய் குறைவாகவே இருக்கும். வரவிலும் பார்க்க செலவு உச்சக்கட்டத்தை அடையும். மனநிம்மதிக் குறைவும் உற்சாகமின்மையும் தோன்றும். குடும்பத்தில் பல கருத்து வேறுபாடுகள் காட்டும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவு அதிகமாகும். சுபகாரிய முயற்சிகள் இழுபறி நிலையிலேயே இருக்கும். புத்திரர்களால் உதவி கிடையாமற் போகும். உத்தியோகத்தர்களுக்கு செய்தொழிலால் அலைச்சலும், கஷ்டங்களும் காட்டும். மன உற்சாகம் இராது. வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். அலைச்சல் பிரயாசைகளே கூடுதலாக இருக்கும். மாணவர்களுக்கு மனச்சோர்வு கூடுதலாக இருக்கும். உற்சாகத்துடன் கல்வியில் முன்னேற வேண்டும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

இவர்களுக்கு நன்மை தீமை கலந்த பலன்கள் காட்டுகிறது. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதால் மனநிம்மதி குலையும். செலவுகள் அதிகரிக்கும். தொடங்கிய கருமங்கள் கைகூடுவதில் தாமதம் காணும். தேகசுகம், குடும்ப சுகம் பாதிப்படையும். புதுமுயற்சிகள் எதையும் தொடங்காமல்விடுதல் நன்று. தேவையற்ற விஷயங்களிலும் தலைகொடுக்காதீர்கள். திருமண நிகழ்வுகள் தாமதமடையும். உத்தியோகத்தர்கள் மனவிரகதியடைந்தவர்களாகக் காணப்படுவர். பொறுமையுடன் பணியாற்றுவது நன்மை தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. வங்கிநிலை சிறப்பாக இராது. மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் தடை, தாமதங்கள் காட்டும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசியினர் செய்தொழிலில் ஊக்கமும் உற்சாகமும் உடையவராகக் காணப்படுவர். நிறைந்த வருவாய் கிட்டும். குடும்பத்தில் மன நிறைவும், மகிழ்ச்சியும், ஆரவாரமும் ஏற்படும். பலர் வீட்டுக்கு விருந்தாளிகளாக வருவார்கள். குடும்பப்பெண்கள் மனச்சந்தோஷமுடையவராக இருப்பர். வீட்டில் சுப கருமங்கள் நடைபெற இடமுண்டு. பிள்ளைகளாலும், நண்பர்களாலும் பொருள் வரவுகள் ஏற்படலாம். தேகசுகம் பாதிப்படையாது. விவாக முயற்சிகள் கைகூடி புத்துணர்ச்சியுடன் காணப்படுவார்கள். உத்தியோகத்தர்கள் தமது கருமங்களில் உயற்சியுடையவராக இருப்பர். வர்த்தகர்களும் வியாபாரத்தால் நல்ல இலாபம் காண்பர். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியும், பாராட்டும் பெறுவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

இவர்களுக்கு செய்தொழிலில் உயர்ச்சியும் முன்னேற்றமும் உணடு. எனினும், செலவுகள் அளவுக்கதிகமாகவே இருக்கும். குடும்ப அங்கத்தவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் இருப்பின் அவை தீரும். பலருடைய நல்லபிப்பிராயங்களைப் பெறுவீர்கள். இல்லறத்தில் இணைய இருப்போருக்கு காலம் கனிந்து நல்ல அனுகூலத்தைக் கொடுக்கும். அடிக்கடி பிரயாணங்களும் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மன உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபடுவர். புதிதாக உத்தியோகத்தை விரும்புவோருக்கும் நன்மை உண்டாகும். வர்த்தகர்கள் நன்றாக வியாபாரத்தை நடாத்தி அதிகலாபம் பெறுவர். புதிய முதலீடுகளும் இடலாம். மாணவர்கள் சொந்த முயற்சியால் சித்தியையும் முன்னேற்றத்தையும் அடைவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

இவர்களுக்கு செய்தொழிலில் இலாபம்குறைவாகவே இருக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவுகளில் விரிசல் ஏற்படும். குடும்பத்தில் மன நிம்மதிக் குறைவு காணும். கும்பப் பெண்கள் உற்சாகம் குறைந்து காணப்படுவர். தேகசுகமும், குடும்ப சுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். கொடுக்கல் வாங்கல்களிலும் பிணக்குகள் தவிர்க்க முடியாமலிருக்கும். பிள்ளைகளால் வருவாய் உரிய நேரத்தில் கிடையாமற் போகலாம். திருமண முயற்சிகள் அலைச்சலிலேயே முடியும். ஏமாற்றுப் பேர்வழிகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். உத்தியோகத்தர்கள் கருமத்தில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். தூரதேசப் பிரயாணத்தை விரும்புவோர் ஏமாற்றமடைய நேரும். வர்த்தகர்கள் வியாபாரத்தில் நட்டத்தையே காண்பர். மாணவர்களும் மனச்சோர்வுடன் கல்விபயில நேரும்.

# தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் குளறுபடி எனக் கண்டனம்!

தமிழ்மொழிமூல ஆசிரிய ஆட்சேர்ப்புக்கு எனக்கோரப்பட்டுள்ள விளம்பரத்தில், ஏற்பட்டுள்ள குளறுபடிகளை - இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச்சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தமிழ்மொழிமூல ஆசிரிய ஆட்சேர்ப்பு விளம்பரத்தில், பலகுளறுபடிகள் இருப்பதாகத் தெரிவித்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ் மொழிமூல மாணவர்களின் தரம்மிக்கதும், நிலைத்து நிற்கக்கூடியதுமான கல்வியில் எள்ளளவேனும் அக்கறைகொள்ளாமலும், மாகாணக்கல்வி அமைச்சினதும், மாகாணக் கல்வித்திணைக்களத்தினதும், கோரிக்கைகள், சிபாரிசுகளைப் புறந்தள்ளியும், ஆசிரியர்களுக்கான ஆள்திரட்டலுக்குக் கல்விஅமைச்சு நடவடிக்கையை எடுத்துள்ளமையை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

3 வருடங்களாக இழுத்தடித்த பின்னர், அண்மையில் 1000 தமிழ்மொழிமூல ஆசிரியர்களை வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழிப் பாடசாலைக்கான ஆள்திரட்டலுக்காக வெளியிடப்பட்டுள்ள விளம்பரமானது, தரமான கல்வி அபிவிருத்தியில் உண்மையான அக்கறையுடைய அனைவருக்கும், அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பிலிருந்துகொண்டே வேண்டா வெறுப்பாகவும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் செயற்படும் அதிகாரிகளாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது . கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் உண்மையான அக்கறையை காட்டவேண்டும். அல்லது மாகாணத்தின் ஆலோசனைகள் சிபார்சுகளைப் பெறவேண்டும். அதுவும் முடியாதாயின் இதற்கான அதிகாரங்களை மாகாணக்கல்வி அமைச்சிடம் கையளித்துவிடுவதே சிறந்தது.

இதுபற்றி கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன .கொடித்துவக்குவிற்கு சங்கத்தின் - தலைவரும் பொதுச் செயலாளரும் கூட்டாக, அவசர கடிதமொன்றை அனுப்பி, வர்த்தமானி பிரசுரத்தில் சிலமாற்றங்களைச் செய்து, மீளவும் விளம்பரப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் பின் வருமாறு,

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு 10 வகையான ஆசிரியர்களை - இத்திட்டத்தின் கீழ ஆள்திரட்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால், 4 வகைக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கோரப்படாத பாடத்துறைகளாவன அ) சங்கீதம்/நடனம் ஆ) சித்திரம் இ) விவசாய விஞ்ஞானம் ஈ) மனையியல் பொருளாதாரம், உ) உடற்கல்வி ஊ) கடல்நீர் உயிர்வள தொழில் நுட்பம்,

இத்துறைகளுக்கு ஆசிரியபற்றாக்குறை மிகவும் மோசமாக உள்ளதுடன், இப்பாடத்துறைக்கு கடந்த இருபது அல்லது முப்பது வருடங்களாக ஆசிரிய நியமனங்கள் செய்யப்படவில்லை என்பதையும், சுட்டிக்காட்டிய பொதுச் செயலாளர், இப்பாடங்களையும் உள்ளடக்கி திருத்தங்களை வெளியிடுமாறும் கோரியுள்ளார்.

இவ்வாசிரிய நியமனங்கள், மாகாணச் சேவைக்குமுரியவை என்பதால், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கு மாத்திரமே, இலங்கை யாப்பின் 13 ஆம் திருத்தத்திற்கு அமைவாக நியமனம் வழங்கப்பட வேண்டும். ஆனால், வெளியிடப்பட்ட விளம்பரத்தின் படி, இலங்கையின் எப்பாகத்தில் உள்ளவர்களும் நியமனம் பெறக்கூடிய வாய்ப்புள்ளது.

இதனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தவர்களின், வேலைவாய்ப்பு அவர்களின் மாகாணத்திலேயே பறிபோகும் நிலை ஒரு புறமும், மறுபுறத்தில் இவ்வாறு நியமனம் பெறுகின்ற வெளிமாகாணத்தவர்கள், எவ்வளவு விரைவாக சாக்குப்போக்குக்கூறி, அல்லது செல்வாக்கு மூலம் தமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுவார்களோ தெரி யாது. எனவே வட-கிழக்கு மாகாணத்தின் கல்வி, நீண்டகால நோக்கில் பாதிப்படையும்.

விசேடமாக ஆங்கிலத்துறையை எடுத்தால், வடக்கு - கிழக்கில் போர்க்காலத்தில் தொண்டாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் வாய்ப்புகள் அருகிப் போகும்.

இதற்கான பரீட்சை நிலையம், கொழும்பில் மாத்திரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான பரீட்சையை ஏன் மேல் மாகாணத்தில் நடத்தவேண்டும்.

இப்பரீட்சையை வடக்கு - கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் நடாத்தக்கோருகின்றோம். பரீட்சை ஆணையாளரால் நடாத்த முடியாதாயின், தயவுசெய்து இப்பொறுப்பை வட-கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைச் சபையிடம் பாரப்படுத்துங்கள்.

உச்சவயதெல்லை 30 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் காரணங்களுக்காக, உச்சவயதெல்லையை 45 வயதாக மாற்றியமைக்கும்படி கோருகின்றோம்.

அ. 95 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

ஆ. இந்த நியமனங்களை வழங்க 2000 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியும், அமைச்சு அதிகாரிகளும், கல்விச் சேவை ஆணைக்குழு அதிகாரிகளும் இழுத்தடித்து, 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே விளம்பரப்படுத்தியுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சேவைக்குப் புள்ளிகள் வழங்கி, முன்னுரிமை வழங்கப்படும் என அமைச்சர்கள் கூறிய வாக்குறுதிக்கேற்ற வகையில் விளம்பரப்படுத்தவில்லை.

எனவே, பகுதிநேர ஆங்கில அல்லது தொண்டர் ஆசிரியர் சேவைக்கு, ஒரு வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட புள்ளி வழங்கப்படும் என விளம்பரப்படுத்துமாறு கோருகின்றோம்.

**அரச ஊழியர்களின் உச்ச வயதெல்லை.**

ஏனைய அரச ஊழியர்களும் விண்ணப்பிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்தாபனக் கோவையின் பிரகாரம், இந்த அரச ஊழியரகளுக்கு உச்சவயதெல்லை கவனத்தில் கொள்ளப்படாது. ஆனால், விளம்பரத்தில் இவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

அத்துடன், ஏனைய அரச ஊழியர்கள்போல், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களையும் உச்சவயதெல்லையிலிருந்து விதிவிலக்களித்து, அல்லது உச்சவயதெல்லை 45 ஆகவேனும் உயர்த்தி, மீளவும் விளம்பரப் படுத்துமாறும் கோருகின்றோம்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்குரிய அடிப்படைத் தகுதி - க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தமிழ்மொழி உட்பட 3 பாடங்களில் சித்தி என விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், தமிழ் மொழியை உயர்தர பரீட்சையில் தோற்றாத, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் போன்றதுறைகளிலும், கலைப்பிரில் தமிழ்மொழி இல்லாது, வேறு கலைப்பாடங்களிலும் சித்தியெய்திய மாணவர்கள் - ஆரம்ப ஆசிரியர்களாக வரும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

எனவே, ஆரம்ப ஆசிரியர்களுக்கான அடிப்படைக் கல்வித் தகமையை - க.பொ.த உயர் தர பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் என்று மாற்றுமாறும் கோருகின்றோம்.

தமிழ்மொழிச் சித்தி அவசியமென, கல்வி அமைச்சுக் கருதின், விளம்பரத்தை க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது 3 பாடத்தில் சித்தி உடன், க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ் மொழியில் விசேடசித்தி (credit pass) என விளம்பரம் செய்யக்கோருகின்றோம். எனச் சங்கத்தின் தலைவர் சி.தண்டாயுதபாணி, பொதுச்செயலாளர், த.மகாசிவம் அவர்களும் கல்வி அமைச்சரிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

# சுதந்திர நாடாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டால் தாய்வானின் மீது போர் தொடுக்கப்படுமாம்!

## சீன அதிகாரிகள் எச்சரிக்கை

தாய்வான் சுதந்திர நாடாக தன்னைப் பிரகடனப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் அந்நாட்டுடன் போர்தொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று சீன அதிகாரிகள் தாய்வானுக்கு எச்சரித்துள்ளனர்.

சீனப் பிரதமர் 'வென்ஜியா பாஓ' அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ள வேளை, இந்த அச்சுறுத்தலை சீன அதிகாரிகள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் ஒரு மாகாணமாகவே தாய்வானை இன்னும் நாம் கருதி வருகின்றோம். எமது கருத்துக்களை ஊதாசீனம் செய்து, தாய்வானை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தும் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டால், போர்ஒன்றை அந்த நாட்டு மக்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று, சீன இராணுவ உயர் அதிகாரியான லூயான் தெரிவித்தார்.

### மாநிலத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி முன்னணியில்

இந்தியாவின் மூன்று மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி முன்னிலை வகிப்பதாக முதலில் கிடைத்த முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த மூன்று மாநிலங்களிலும் இதுவரை பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸே ஆட்சி செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# பலஸ்தீனப் போராளி குழுக்கள் கெய்ரோவில் 3 நாட்கள் பேச்சு!

பலஸ்தீனப் போராளிக் குழுக்கள் கெய்ரோவில் மூன்று நாட்கள்வரை நிபந்தனையுடனான பேச்சுவார்த்தை ஒன்றினை ஆரம்பித்துள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர்நிறுத்தம் ஒன்றிற்கு இஸ்ரேல் உடன்படும் நிலையில் தாமும் போர்நிறுத்தம் ஒன்றை செய்வதற்கு 13 பலஸ்தீன அமைப்புக்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இதனிடையே, இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் சிவன் சலோம் பலஸ்தீனர்களின் போர்நிறுத்தம் நீண்டகாலத்திற்கு நீடிக்கக்கூடியதல்ல என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஆப்கானுக்கு விஜயம் செய்ய திட்டம்

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆப்கானிஸ்தானின் தற்போதைய முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டிற்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளார்.


ஆப்கானிஸ்தானில் இயங்கிவரும் தலிபான்களுக்கு எதிரான இரு குழுக்களையும், அங்கு கட்டடப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்பு ஒன்றினையும், இறுதியாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி 'கமிட் கசயை'யும் சந்திக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

தலிபான் ஆட்சியில் இருந்தபோது, அதை அகற்றுவதற்கு அமெரிக்க அரசுடன் இணைந்து செயற்பட்ட குழுக்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாகவே அதன் தலைவர்களைச் சந்திக்க ரம்ஸ்பீல்ட் திட்டமிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் போர்முடிவடைந்துவிட்டதாகவும், இனி அங்கு கட்டுமானப்பணிகளில் ஈடுபடப்போவதாகவும் கடந்தமாதம் ரம்ஸ்பீல்ட் அறிவித்திருந்தார்.

ஆனால், அண்மைக்காலங்களில் கூட்டுப்படையினர் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும், இத்தாக்குதல்களில் ஆப்கானிஸ்தானியர்களும், அந்நிய நாடுகளின் தொண்டு அமைப்பைச் சேர்ந்தவர்களும் கொல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஐ.நா சபையின் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 11 பேர்வரை காயமடைந்ததாகவும், உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இத்தாக்குதல் 'பாரா' மாகாணத்தில் நடைபெற்றதாகவும், மக்கள் தொகை கணிப்பிடும் பணியில் ஈடுபட்டு வந்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக, அப்பிரதேசத்தின் கவர்னர் கரிம்பராகி ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

## உலக நோக்கு

# அல்கொய்டா அமைப்புடன் தொடர்பென பிரிட்டனில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்!

ஒஸாமா பின்லேடனின் அல் கொய்டா அமைப்பின் அங்கத்தவர் 'ரெயிட்' செப்டெம்பர் 11 தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்பட்டு அமெரிக்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

தனது பாதணியினுள் வெடிபொருட்களை மறைத்துவைத்து விமானமொன்றை தகர்க்கமுற்பட்டதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேவேளை, இவருடன் தொடர்புடையவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு பிரித்தானியாவில் 'சயீட் படற்' என்பவர் நேற்று கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

பிரித்தானியாவில் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளவதற்கு அல் கொய்டா திட்டமிட்டுள்ளதாக பிரித்தானிய புலனாய்வுப் பிரிவு இரு வாரங்களுக்கு முன் எச்சரித்திருந்ததைத் தொடர்ந்து, சயீட் படற் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரிட்டன் உள்நாட்டு அமைச்சர் 'டேவிட் பிளங்கற் அல்கொய்டா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என நேற்றுக் கைது செய்யப்பட்ட சயீட் படற் தெரிவித்த கருத்து பிரிட்டன் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### ஈராக்கின் முன்னேற்றத்திற்கு உதவுமாறு நேசநாடுகளிடம் அமெரிக்கா கோரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் நேசநாடுகளிடம் ஈராக்கின் முன்னேற்றத்திற்கு முக்கியபங்கினை வகிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக ஈராக்கில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேசநாடுகள் - ஈராக்கில் சமாதானம், ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த உதவுமாறு நேட்டோ வெளிநாட்டமைச்சர்களைக் கேட்டுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்காவினால் அமைக்கப்பட்டுள்ள கூட்டுப்படையில் 19 நேட்டோ நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## செய்தி படத்தொகுப்பு



ஈராக்கில் கொல்லப்பட்ட இரண்டு ஜப்பானிய இராஜதந்திரிகளது உடல்கள், ஜப்பானுக்கு நேற்றுக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர்களது உறவினர்கள் கதறி அழுவதைக் காணலாம்.



ஈராக்கின் பாக்தாத்தில் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க கவச வாகனம் ஒன்று பற்றி எரிவதனை - மற்றொரு வாகனத்தில் செல்லும் அமெரிக்கப் படையினர் அவதானிப்பதைக் காணலாம்.



புதிதாக சேர்க்கப்பட்ட பலஸ்தீனப் பொலிஸார் தமது பயிற்சியை முடித்த பின்னர், தமது பட்டமளிப்புவிழாவில் அழிக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனத் தலைமையகத்திற்கு முன்னால் அணிவகுத்துச் செல்வதைக் காணலாம்.



இஸ்ரேலியக் காவலரண் அருகில் நேற்று வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் அடங்கிய பொதியை அகற்றும் முயற்சியில் இஸ்ரேலியப் படையினர்.



யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அருகில் துர்நாற்றம் வீசும் வகையில், தொடர்ச்சியாக கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டு வரும் இடத்தைப் படத்தில் காணலாம். இவ்விடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் விடுதியில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், இந்த வீதியால் செல்லும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

## தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க

வடக்கு கிழக்கில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என, தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஞானசேகரன் நேற்று மாலை தொழிலமைச்சரைச் சந்தித்து உரையாடியபோதே - அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கில் பெரும் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது. 1992 ஆம் ஆண்டு முதல் 360 இற்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் பகுதிநேர ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகிறார்கள்.

இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே பணியாற்றவேண்டிய தாம், பாடசாலைகளில் முழுநேரக் கடமையில் ஈடுபட்டுவருவதாகவும் தொழில் அமைச்சரிடம் ஞானசேகரன் தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

## நாற்சந்தி

'ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள் குடாநாட்டுக்கு இரகசிய விஜயமாம்...' இராணுவ நிலைகளை அவதானிக்க மூன்று நாட்கள் தங்கியிருந்தனராம்... தற்போதைய நிலவரங்களையும் ஆராய்ந்தார்களாம்...

'ம்..ம்..சொல்லு'

முந்தி...கொஞ்ச நாட்களுக்கு முந்தி... இந்திய அதிகாரிகள் அதாவது றோ உளவமைப்பின் அதிகாரிகளும் வந்து படையினருடனும், சில அரசியல்வாதிகள் என்று சொல்லிக்கொள்வோருடனும் ரகசியமாக பேசிவிட்டு சென்றவர்கள்ளெல்லே...!'

'ம்...ம்..."

"சிலமாதங்களுக்கு அமெரிக்காவின் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்சும் வேறு சில அமெரிக்கர்களும் எழுதுமட்டுவாள்வரை சென்று நிலைமைகளை அவதானிச்சு படைஅதிகாரிகளுடன் பேசிவிட்டுசென்றார்களல்லே...!"

'ஓமோம்..'

அந்த நாட்களிலை பிரிட்டிஷ்காரரும் தங்கடை அதிகாரிகளுடன் வந்து வடபகுதி இராணுவ நிலைகளை சுற்றிப்பார்த்து உயர் பாதுகாப்பு வலயத்தையும் நோட்டமிட்டு விட்டு இராணுவ அதிகாரிகளுடன் ஏதோ குசுகுசுத்து விட்டும் போனவையெல்லே..."

'ம்..ம்..சொல்லன்...'

நான் ஏதோ சீரியஸா சொல்லுறன்,'ஓம்' என்று மந்திரம் ஓதிக்கொண்டிருக்கிறாய் நீ...'-என எரிச்சலுடன் கத்திய மணியத்தாரை கனகர் ஏறிட்டுப் பார்த்தார்.

பின்னர்,'இவை இரகசியமாக வருவதும், பரகசியமாக வருவதும், ஒருவர் மாறி ஒருவராக வருவதும் படையினருடன் பேசிவிட்டு செல்வதும் உனக்கு பயமாக இருக்கே மணியம்...?' என்றார்.

'பின்ன இப்பிடி உன்னிப்பாக பார்க்கிறோம்'என்று அடிக்கடி சொல்லி விட்டுத தானே இந்தியன் ஆமி இலங்கை வந்து குதித்து அட்டகாசம் பண்ணியது...' என்றார் மணியம்.

'ஓ..நீ அங்கை நிக்கிறாய்,'என்ற கனகர்,இப்ப நிலைமைவேறு.. சிறிலங்கா என்ற பால்பானையை ருஷ்யப்பூனை, அமெரிக்கப்பூனை ,இங்கிலாந்துப் பூனை,இந்தியப்பூனை என உலகிலை உள்ள எல்லாப்பூனையையும் பாதுகாக்க வந்திருக்கிறதுகள்...பாலை ஆர் குடிக்கிறது.எண்டதிலைத்தானே பிரச்சினையே இருக்கு..இது விளங்கேல்லையே"என்றார் கூறிச்சிரித்தார்.

-தெருவாசி

## இலங்கை அழைப்பு விடுத்தால்...

இந்திய மீனவர்களை கைதுசெய்வதை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உடனடியாகக் கைவிடவேண்டும்.

இந்தியா, இலங்கை ஆகிய இரண்டும் கடற்படைகளைக் கொண்டுள்ளன. விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை மூன்றாவது கடற்படையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அத்துடன், விடுதலைப் புலிகள் கடலில் மேற்கொள்ளும் சட்டரீதியற்ற பயிற்சிகளை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவும், இலங்கையும் இணைந்து திருமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். இலங்கையில் தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிபெறும். ஆனால், அதற்காக நீண்டகாலம் எடுக்கக்கூடாது.

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் நிகழ்வுகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இந்தியா இலங்கையின் இறைமையில் அதிக அக்கறைகொண்டுள்ளது.

அரசாங்கத்தின் இடைக்கால தீர்வு யோசனைக்கு விடுதலைப் புலிகள் பதில் அளித்துள்ளனர். ஆனால், அந்தப் பதில் நியாயமானதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Catwas.Com Catwas.Com Catwas.Com Catwas.Com
புதிய கணனிப் பிரிவு ஆரம்பம்
05.01.2004
Microsoft Office
காலம் : 4 மாதம்
✓போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும்
✓வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களுக்கும்
விசேட சலுகை வழங்கப்படும்
விசேட அம்சங்கள்
தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படும்
தனிப்பட்ட கவணம் எடுக்கப்படும்
Certificate Courses
Ms Word, Photo Shop
Ms Excel, Corel Draw
Ms Access, Page Maker
Ms Power point
விண்ணப்ப முடிவு திகதி 15.12.2003
விண்ணப்ப படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
E-Mail : Catwasomi@isplanka
Catwas.Com, No.48, Temple Road, Jaffna. T.P 021 2223805
Catwas.Com Catwas.Com Catwas.Com

## ஜனாதிபதி...

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 1992ம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக மாவிட்டபுரம் பகுதியிலிருந்து நான் எனது குடும்பத்துடன் இடம்பெயர்ந்து இன்றுவரை வீட்டுக்குச் செல்லமுடியவில்லை.

பலாலிப் பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருப்பதால், அப்பகுதிக்குள் உள்ள வீடுகளுக்குச் செல்லமுடியாதநிலை உருவாகியுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் எதிலும் பலாலி உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டமை குறித்து குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையில் அதனை எவ்வாறு உயர் பாதுகாப்பு வலயமெனக் கூறமுடியும்? என்றும், இது அரசியல் யாப்புக்கு முரணானதாகும் எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இது ஓர் அடிப்படை மனிதஉரிமைமீறல் குற்றமாகும் என்றும், இதற்கான நட்டஈட்டினைப் பெற்றுத்தருமாறும் மாவை சேனாதிராஜா உயர் நீதிமன்றைக் கோரியுள்ளார்.(01)

## தேசியஅரசையோ..

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டிய முக்கியமான தேவை இருப்பதால் இருதரப்பும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனினும் சமாதான முயற்சிகளைப் பொறுப்பாக நின்று முன்னெடுக்கும் வாய்ப்பினை ஒருவரே பெற்றிருக்க முடியும். பாதுகாப்பு அமைச்சின் பிரதிப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வதானது, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் பல சிரமங்களை ஏற்படுத்தும்.

இதனால்தான் அப்பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசிடம் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு ஒப்படைக்கப்படுவதையே பிரதமர் வலியுறுத்தியுள்ளார். தற்போது காணப்படும் அரசியல் குழப்நிலையைத் தீர்த்து வைப்பதற்கு தேசிய அரசு அமைப்பது பொருத்தமான ஒன்றல்ல. ஆனால், ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் ஓர் சுமுகநிலை உருவாகுமேயானால் அதன்பின் இவ்விடயம் குறித்து ஆராயமுடியும்.

எவ்வாறாயினும், இத்தகைய அரசியல் குழப்பம் நீடிப்பது நாட்டுக்கு நல்லதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாழ்கைச் செலவுக்கு ஏற்றதாக வரவு - செலவுத் திட்டம் இல்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

நாட்டில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றதாக 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு அமையவில்லை என - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். அரச சேவை பொன்விழா நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வருமான வரி, பெறுமதி சேர் வரி என்பன அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், நாளொன்றுக்கு 40 ரூபாவே சம்பள உயர்வாக வழங்கப்படவிருக்கின்றமை அரச ஊழியர்களுக்குப் போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்தார். (01)

## அரசியல் மோதல்களை...

அமைச்சர் யொறிகோ கவாகுச்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இலங்கையின் தற்போதைய அரசியல் முரண்பாடுகள் ரோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைக்கவிருக்கின்ற நிதி உதவியினை தடைசெய்யக்கூடியவை. எனவே, தற்போதைய முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு சமாதான முன்னெடுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

அத்துடன் ரோக்கியோ நிதியுதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானும் முக்கியமான நாடாகும். இந்த நிதி மூலம் இலங்கையில் மீள்கட்டுமானமும், அபிவிருத்தியும் ஏற்படுத்தப் படவிருக்கின்றது. தற்போதைய அரசியல் நெருக்கடியால் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பதோடு, ஒரு தேக்கநிலையும் அடைந்துள்ளது. இது தொடர்பாக நாம் அவதானித்துக்கொண்டுவருகின்றோம்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் மூலம் சமாதானச் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென ஜப்பான் உறுதியாக நம்புகின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடியிலும், விடுதலைப்புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் போர் நிறுத்தத்தை சிறந்த முறையில் கடைப்பிடிப்பதனை ஜப்பான் அரசு வரவேற்கிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்தும் தனது உறுதியான ஆதரவை வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரபாகரனுக்கு....

இது குறித்து மேலும் செய்தி வெளியிட்டுள்ள மேற்படி இணையத்தளம், இழக்கப்பட்டுள்ள புலிகளுடனான தொடர்புகளை மீளவும் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆலோசகர்களும் தீவிரமாக முயற்சித்துக்கொள்வதாகவும்,

தற்போது புலிகளின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் செய்திக்கான பதில் சாதகமான முறையில் அவரிடமிருந்து கிடைக்கும் என ஜனாதிபதி சந்திரிகா எதிர்பார்த்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் உறுதிமொழியை...

உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இனிவரும் காலங்களில் ஒருபோதும் படையினர் கண்ணிவெடிகளை புதைக்கக்கூடாதென அவர்களை அரசாங்கம் கேட்டுள்ளது. ஆனால், விடுதலைப்புலிகளும் இதை ஏற்கவேண்டும். இல்லையெனில் இது தொடர்பாக படையினர் சந்தோசமடையமாட்டார்கள். அத்துடன், இந்தப் பிரச்சினைக்கு ஒரு கட்சி மட்டும் ஆதரவாகச் செயற்படமுடியாதெனவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கப்படாத ஒரு இயக்கம். எனவே, அவர்கள் ஒட்டாவா உடன்படிக்கையில் கையெழுத்திடமுடியாது. ஆனால், தாம் இனிவரும் காலங்களில் கண்ணிவெடிகளை புதைக்க மாட்டோம் என அவர்கள் உறுதி வழங்கவேண்டும்.

கண்ணிவெடிகள் தொடர்பாக இதுவரை நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எதுவும் பேசப்படவில்லை. ஆனால், இனிவரவுள்ள பேச்சுக்களில இது தொடர்பாக கட்டாயம் பேசப் படவேண்டும்.

கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான நடவடிக்கைகளில் அரசாங்கமும், ஏனைய நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. இதுவரை 150,000 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. தற்போதுள்ள கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் 2006 ஆம் ஆண்டு பூரணமாக அகற்றப்பட்டு, நாடு கண்ணிவெடிகளில் இருந்து விடுபடும் கண்ணிவயல்கள் தொடர்பான 3000 குறிப்புகளை படைத்தரப்பினர் யூ.என்.டி.பீக்கு வழங்கியுள்ளனர். ஆனால், விடுதலைப்புலிகள் இவ்வாறு வழங்கினார்களோ தெரியாது.

கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டத்திற்கு ஐ.நா.வின் - யூ.என்.டி.பியும் யுனிசெவ்வும் உதவுகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மழை தொடர்ந்து...

பெய்ததாகவும் நேற்றுமுன்தினம் மட்டும் 9.7 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளதாகவும் யாழ். திருநெல்வேலியில் இயங்கும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ப)

## புலிகளிடம்...

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவரை இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த இராணுவச் சிப்பாய் முன்னரும் படையிலிருந்து தப்பியோடிய போதிலும் கடந்த மாதம் இவரைக் கைதுசெய்த படையினர் யாழ். முகமாலைப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தியிருந்தார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.